RE/MAX Realtron Blue Force · Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate · HOMEWORTH · See what your home worth! www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 04 மார்ச் 2022 இதழ்:- 45

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

**கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!**
**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**
**உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

GT Brokers
Critical Illness | No medical Life | Disability Income | Mortgage Life | Travel & Visitor | Life Insurances. RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

# போர்க் குற்றங்கள் தொடர்பாக சரத்பொன்சேகா வாக்கு மூலம் வழங்க வேண்டும் - நிமல்கா



இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் போர் குற்றங்கள் குறித்த விசாரணைகளில் பிரதான சாட்சிக் காரராக முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா முன் வந்து உண்மைகளை கூறி னால் பிரச்சினைகளை இலகுவாக தீர்க்க முடியும் என இலங்கையின் சிவில் செயற்பாட்டாளரும், அனைத்து வகையான பாகுபாடு மற்றும் இன வெறிக்கு எதிரான சர்வதேசஅமைப்பின் இலங்கை க்கான தலைவருமான நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார். (5ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

# ஈழத்தமிழர் நோக்கிய இந்தியாவின் அணுகு முறையும் அதன் தோல்விகளும்

இந்தோ பசுபிக் கட்டமைப்பு விருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றிய கேள்விகளும் இலங்கை இந்திய அமெரிக்க சீன உறவு பற்றிய உரையாடல்களும் பொது வெளியில் அவதானிக்கப்படுகிறது. அது மட்டு மன்றி ஈழத்தமிழர்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் போக்கினையும் இந்தியாவை அணுகும் எந்த நகர்வையும் நிராகரிக்கும் அத்தரப்புக்கள் ஈழத்தமிழரது அரசியலின் (21ம் பக்கம் பார்க்க)

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டுமென இலங்கை அரசிடம் ஐ.நா. வலியுறுத்து




பயங்கரவாத் தடைச் சட்டத்தின்கீழ் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்படக்கூடிய நபர்கள், குறிப்பாக இன மற்றும் மதரீதியான சிறுபான்மையினத்தவர்களின் உரிமை கள் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய வாய்ப்பு க்கள் காணப்படுவதுடன் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கான இடைவெளி சுருக்க மடையக் கூடிய சாத்தியமும் உள்ளது.

எனவே பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப் படும் வரையில் இலங்கை அரசாங்கம் அச்சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கை யாளர்களும் விசேட செயற் திட்டங்களுக்கான நிபுணர்களும் கூட்டாக வலியுறுத்தி யுள்ளனர் (7ம் பக்கம் பார்க்க)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
RE/MAX Royal Properties · Mortgage Alliance

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial

**Team SIVA** WILL BRING THE BEST RESULTS!



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience



**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Markham & Brimortan



**Scarborough** $1,850
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included


### Derry/Goreway

**Mississauga** $498,900
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers


### Burnamthorpe/Living Arts

**Mississauga** $499,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen


### Kennedy / Hwy 401

**Scarborough** $699,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.

### Yonge & Finch

**Toronto** $819,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony

### Bleasdale/ Creditview

**Brampton** $849,000
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home

### Park Rd S/Phillip Murray Ave

**Oshawa** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping

### Rossland And Ravenscroft

**Ajax** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Mclaughlin/Elgin

**Brampton** $949,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights

### Brock & Dellbrook

**Pickering** $1,299,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck

### Markham/Ellesmere


**Scarborough** $1,299,999
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated


### Ellesmere/Conlins

**Scarborough** $1,299,999
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance


### Westney/Rossland

**Ajax** $1,499,000
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.

### Bovaird/Torbram

**Brampton** $1,499,999
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen

### Richmond St W/Peter St


**Toronto** $2,250
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft

### Sheppard Ave E/ 404


**Toronto** $2,600
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



**கியூபாவிற்கான சுற்றுலா**

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage) உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி, 5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்



# ஐ.நா.மனித உரிமை ஆணையாளரிடம் முறையிட்டார் பேராயர் மல்கம் ரஞ்சித்!

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல்பச்லெட்டுக்கும், பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் இடையிலான முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று ஜெனிவாவில் 01 மார்ச் 2022 இடம் பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் பொறுப்புக்கூறலில் ஏற்பட்டுள்ள திசை மாறிய பொறிமுறை உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன் போது பேராயர் மனித உரிமைகள் ஆணையாளருக்கு விரிவாகத் தெளிவுப்படுத்தினார்.

இது தொடர்பான பல தகவல்களை பேராயர் மல்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பித்தார் என்றும் தெரியவருகிறது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத் தொடரின்போது



இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசின் நீதி விசாரணை மீதான நம்பிக்கை தகர்ந்து விட்டதாக தெரிவித்த பேராயர் மல்கம் ரஞ்சித், நீதி கோரி சர்வதேசத்தை நாடவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்காக வத்திக்கான் அனுமதியை நாடிய அவர், வத்திக்கான் சென்று பாப்பரசர் பிரான்சிஸை சந்தித்துப் பேசிய பின்னர் ஜெனிவா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா மனிதஉரிமைப் பேரவை இம்முறையாவது தீர்வு வழங்குமா?

இம்முறை இடம்பெறும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் நேற்றையதினம் (03) வவுனியா பழையபேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்து வருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது. தொலைத்த எமது பிள்ளைகளை காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்து விட்டனர். வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்திற்கு வருவோமா என்ற நம்பிக்கை




அற்றநிலையில் இந்த போராடங்களை முன்னெடுத்து வருகின்றோம். இலங்கையில் இனப்படுகொலை தொடர்ச்சியாக இடம் பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் ராஜபக்ஷ குடும்பமும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்த படைத்தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்.

யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது. எனவே சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்க வேண்டும். இம்முறை இடம் பெற்று வரும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவோம் என்றனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# பாதிக்கப்பட்ட உக்ரேனிய மக்களை வரவேற்கும் கனடா!
# ரஷ்யாவுக்கு பொருளாதாரத் தடை! உக்ரேனுக்கு ஆயுத உதவி!

ரஷ்ய ஊடுருவலைத் தொடர்ந்து, போருக்குத் தப்பியோடி வரும் உக்ரைனியர்களை விரைவாக வரவேற்பதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கி வருவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்துள்ளதைத் தொடர்ந்து அரை மில்லியனுக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அக்கப் பக்கத்து நாடுகளில் தஞ்சம் புக முயன்று வருகிறார்கள்.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ரஷ்ய ஊடுருவலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதற்றத்தையடுத்து, கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சகத்துக்கு கடந்த சில வாரங்களாக உக்ரைனிலிருந்து வரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

ஏற்கனவே கனடாவுக்கு வந்தவர்கள் மற்றும் உக்ரைனிலிருந்து தப்பி வருபவர்கள் விரைவாக கனடா வந்தடையவும், இந்த அநியாயமான போர் முடிவுக்கு வந்த பிறகும் கூட, அவர்கள் கனடாவில் தங்கும் வகையிலும், அவர்களது விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாக ட்ரூடோ தெரிவித்தார்.

அத்துடன் உக்ரைன் நாட்டவர்கள் பணி அனுமதி மூலம் கனடா வரவும், ஏற்கனவே கனடா வந்துள்ளவர்களின் பணி அனுமதிகளை நீட்டிக்கவும் கூடுதல் வழிவாய்ப்புகளை உருவாக்குவதை உறுதி செய்வதற்காக, ஆவன செய்ய இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி 19ஆம் திகதியிலிருந்து சுமார் 4,000 உக்ரைனியர்களின் புலம்பெயர்தல் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள புலம் பெயர்தல் துறை அமைச்சரான Sean Fraser,



ரஷ்யா உக்ரைனை ஊடுருவலாம் என்ற தகவல்கள் கிடைக்கப் பெற்றதுமே, வந்து குவிய இருக்கும் விண்ணப்பங்களை வரவேற்பதற்காக, ஒரு மாதத்திற்கு முன்பே கனடா தயாராகத் துவங்கி விட்டதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை கனடா உக்ரைனுக்கு டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களை வழங்கவுள்ள நிலையில் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை தடை செய்கிறது. ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிரான போராட்டத்தை ஆதரிப்பதற்காக கனடா, உக்ரைனுக்கு டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் (anti-tank weapons) மற்றும் மேம்படுத்தப்பட்ட வெடிமருந்துகளை வழங்கும் என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். மேலும், ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியை தடை செய்வதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

ஒட்டாவாவில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரூடோ, ரஷ்ய ராணுவத்திற்கு எதிராக உக்ரைனின் வீரமிக்க பாதுகாப்புக்கு கனடா தொடர்ந்து ஆதரவை வழங்கும். ரஷ்யாவிலிருந்து அனைத்து கச்சா எண்ணெய் இறக்குமதிகளையும் தடை செய்யும் எங்கள் நோக்கத்தை நாங்கள் அறிவிக்கிறோம், என்று கூறினார்.

இந்த கச்சா எண்ணெய் தான் ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் அவரது தன்னலக் குழுக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் ஒரு தொழில் என்பதால் கனடா இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது. கனடா ஏற்கனவே உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் உயிருக்கு ஆபத்தற்ற ஆயுதங்களை (non-lethal) அனுப்பியுள்ளது, மேலும் சர்வதேச வங்கிக் கொடுப்பனவுகளுக்கான SWIFT அமைப்பிலிருந்து ரஷ்யாவை அகற்றுவதை ஆதரிப்பது உட்பட பல தடைகளை ஆதரித்துள்ளது.

நாங்கள் உக்ரைனுக்கு இன்னும் ஆயுத உதவிகளை வழங்குகிறோம், நாங்கள் 100 கார்ல் குஸ்டா..ப் டாங்கி எதிர்ப்பு ஆயுத அமைப்புகளையும் 2,000 ரொக்கெட்டுகளையும் அனுப்புவோம், அவற்றை விரைவில் வழங்க நாங்கள் பணியாற்றுவோம்' என்று கனேடிய பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் கூறினார்.

## உக்ரேனுக்கு உதவும் நாடுகளுக்கு ரஷ்யா விடுத்துள்ள எச்சரிக்கை

உக்ரைனுக்கு பிற நாடுகள் வழங்கும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் சம்மந்தப்பட்ட நாடுகளே பொறுப்பு என புடின் எச்சரித்துள்ளார். உக்ரைன் – ரஷ்யா போர் சண்டை தொடர்ந்து நடந்து வருகிறது. இதனிடையில் போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே பெலாரஸில் நடைபெற்ற பேச்சுவார்த்தை எந்த முடிவும் எட்டப்படாமல் நிறைவடைந்து.

பேச்சுவார்த்தை சுமார் ஐந்து மணி நேரம் நீடித்ததாகவும் அப்போது பொதுவான உடன்படிக்கை எட்டக்கூடிய சில அம்சங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் பேச்சுவார்த்தை நடத்திய ரஷ்ய குழுவின் தலைவர் விளாடிமினி மெடின்ஸ்கி தெரிவித்தார். எதிர்வரும் நாட்களில் பேச்சுவார்த்தையை தொடர்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உக்ரைனுக்கு பிற நாடுகள் வழங்கும் தளவாடங்கள், ஆயுதங்கள் ரஷ்யப் படைகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டால் அதற்கு சம்மந்தப்பட்ட நாடுகளே பொறுப்பாகும் என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான போர் மிகத்தீவிரம் அடைந்துள்ள நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்


AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

டொமினிக்கன் சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், இரண்டாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி,
புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்
7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 | 25% OFF C$ 2,000.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.
a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

# போர்க் குற்றங்கள் தொடர்பாக சரத்பொன்சேகா வாக்கு மூலம் வழங்க வேண்டும் - நிமல்கா




இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் போர் குற்றங்கள் குறித்த விசாரணைகளில் பிரதான சாட்சிக் காரராக முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா முன் வந்து உண்மைகளை கூறினால் பிரச்சினைகளை இலகுவாக தீர்க்க முடியும் என இலங்கையின் சிவில் செயற்பாட்டாளரும், அனைத்து வகையான பாகுபாடு மற்றும் இனவெறிக்கு எதிரான சர்வதேச அமைப்பின் இலங்கைக்கான தலைவருமான நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார்.

சரத் பொன்சேகா யுத்தத்தை இயக்கிய அப்போதைய தளபதி என்பது மட்டுமல்ல அவர் நடுநிலையாக சில விடயங்களை கூறிக்கொண்டுள்ளார். இராணுவ தளபதி என்ற ரீதியில் தனது இராணுவத்தை காப்பாற்ற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார், அதனை பிழையென கூறிவிட முடியாது.

அதேபோல் தனிப்பட்ட தவறுகள் இடம் பெற்றிருக்க வேண்டும், அதற்கான விசாரணைகளை நடத்தி உரிய நபர்களை தண்டிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.


தனிப்பட்ட குற்றங்கள் இடம் பெற்றுள்ளதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறுவதே மிகமுக்கிய வாக்குமூலமாக கருத வேண்டும். ஆகவே சரத் பொன்சேகா உண்மைகளை தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவற்றை கூறினார்.

# அமெரிக்காவின் மூத்த அதிகாரி இலங்கை செல்கிறார்

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் விக்டோரியா நுலண்ட் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார். இவரது விஜயமானது மார்ச் மாதம் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடனின் ஆட்சி ஏற்பின் பின்னர் இலங்கை குறித்த அமெரிக்காவின் பார்வை மற்றும் அணுகுமுறை என்பவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. இதனடிப்படையிலேயே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மூத்த இராஜதந்திரியான விக்டோரியா நுலண்ட் கொழும்பு செல்கிறார்..



இவரது விஜயத்தின் போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பினரையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சியினரையும் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வொஷிங்டன் தளமாகக் கொண்ட உலகளாவிய மூலோபாய ஆலோசனை மற்றும் வணிக இராஜதந்திர நிறுவனத்தின் மூத்த ஆலோசகரா பணியாற்றியுள்ளார்.

32 ஆண்டுகளாக அமெரிக்க இராஜதந்திர தூதவராக பணியாற்றியுள்ள விக்டோரியா நுலாண்ட் , ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் செயலாளர் ஜோன் கெரியின் கீழ் 2013 - 2017 வரை ஐரோப்பிய மற்றும் யூ ரேசிய விவகாரங்களுக்கான உதவி செயலாளராக பணியாற்றினார். செயலாளர் ஹிலாரி கிளிண்டனின் பதவிக்காலத்தில் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளராகவும், 2005 - 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் இரண்டாவது பதவிக் காலத்தில் நேட்டோவுக்கான அமெரிக்க தூதராகவும் செயற்பட்டுள்ளார். மேலும் 2010, 2011 வரை ஐரோப்பாவில் மரபு ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான ஒப்பந்தத்தில் சிறப்புத் தூதுவராகவும் தலைமைப் பேச்சுவார்த்தையாளராகவும் இருந்துள்ளார்.

2003 - 2005 வரை துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் நுலாண்ட் பணியாற்றியுள்ளார். அத்துடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பல்வேறு திட்டங்களில் ரஷ்யா, சீனா மற்றும் மங்கோலியாவில் உள்ளிட்ட நாடுகளில் பணியாற்றியுள்ளார்.

நீண்ட நாட்களுக்கு பின்னர் இவ்வாறானதொரு மூத்த இராஜதந்திர அதிகாரியை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிர்ப்பந்தங்களால் வரும் மாற்றங்கள்?

அரசியலில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. அரசியலில் ஒரு காலத்தில் சரியென்று கருதப்படும் முடிவுகள். பிறிதொரு காலத்தில் தவறென்று உணரப்படலாம். அதே போன்று ஒரு காலத்தில் தவறென்று கருதப்பட்டவை பின்னர், சரியென்று ஏற்கப்படலாம். இந்த மாற்றங்கள் அனைத்தும் விருப்பங்களிலிருந்து ஏற்படுபவை அல்ல - மாறாக சூழ்நிலை மாற்றங்களால் ஏற்படும் மாற்றங்களாகும்.

ரஷ்யாவின் படையெடுப்பை தொடர்ந்து, உலக அரசியல் சடுதியாக மாற்றமடைந்திருக்கின்றது. ஐரோப்பாவில் போர் மேகமொன்று உருவாகி வருகின்றது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு உலக அரசியலில் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றன.

தாய்வானின் சுயாதீனத்தை சீனா அங்கீகரிக்க மறுக்கின்றது. ஆனால் தாய்வானின் சுயாதீனத்தை அமெரிக்கா அங்கீகரிக்கின்றது. இந்த நிலையில் ரஷ்யாவின் இராணுவ நகர்வு சீனாவுக்கும் உற்சாகத்தை கொடுத்திருப்பதாக சில கணிப்புக்கள் கூறுகின்றன. தாய்வானை இராணுவ ரீதியில் சீனா ஆக்கிரமிப்பதற்கான வாய்ப்புள்ளதாக சர்வதேச அரசியல் வல்லுநர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

இந்த நிலையில் ஜப்பானின் முன்னாள் ஜனாதிபதி ஷின்சோ அபே, அமெரிக்காவின் அணுவாயுத தளமொன்றை ஜப்பானில் நிறுவ வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர், ஜப்பானில் அணுவாயுத உற்பத்தி மற்றும் ஏனைய நாடுகளின் அணுவாயுத தளங்களை நிறுவுவதை ஜப்பான் நிறுத்தியிருந்தது. ஆனால், தற்போதைய பதற்ற நிலையானது,

அமெரிக்காவின் அணுவாயுத தளத்திற்கு இடமளிக்க வேண்டுமென்னும் சிந்தனையை ஜப்பானுக்குள் ஏற்படுத்தியிருக்கின்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள்மீது, அமெரிக்கா அணுகுண்டு தாக்குதலை மேற்கொண்டு, ஜப்பானை நிர்மூலமாக்கியது. எனினும், அடித்த அமெரிக்காவோடே ஜப்பான் பின்னர் கூட்டுச் சேர்ந்து கொண்டது. விருப்பங்களிலிருந்து உலகத்தை நோக்காமல், தங்களின் தேவைகளிலிருந்து உலகத்தை நோக்கியதால், அமெரிக்காவோடு கூட்டுச் சேரும் மூலோபாய முடிவை ஜப்பான் எடுத்திருந்தது.

அரசியலில் புனித கொள்கைகள் எதுவுமில்லை. புனித கொள்கைகளை வைத்திருப்பதாகக் கூறுபவர்கள் அரசியலில் முன்நோக்கி பயணிப்பதுமில்லை. அவ்வாறானவர்களால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைப்பதுமில்லை. அரசியலில் சூ ழ்நிலை கருதி முடிவுகளை எடுப்பவர்களே வெற்றி பெறுகின்றனர். ஓர் அரசியல் முடிவென்பது வெற்றியை காண்பிக்க வேண்டும். ஒருவேளை தோல்வியடைந்தால், அந்த தோல்வியிலிருந்து கற்றுக் கொண்டு தவறுகளை ஒப்புக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் தயங்கக்கூடாது.

ஜப்பானின் அணுகுமுறையிலிருந்து ஈழத் தமிழர்கள் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏனெனில், இப்போதும் கடந்த காலத்தை நினைவுபடுத்தும், கடந்த காலத்தை மனதில் கொண்டு விவாதங்கள் செய்யும் ஒரு போக்கு, தமிழ்த் தேசிய பரப்பில் காணப்படுகின்றது. இவ்வாறான கடந்தகாலம் தொடர்பான உணர்ச்சிவசப்பட்ட பார்வைகள் எந்த வகையிலும் தமிழ்த் தேசிய அரசியல் முன்நோக்கி பயணிப்பதற்கு பயன்படாது. கடந்த காலம் கசப்பான அனுபவங்களைத் தந்திருந்தாலும் கூட, அந்த அனுபவங்களைக் காவிக் கொண்டிருப்பதால், முன்நோக்கி பயணிக்க முடியாது. இதனை தமிழர் அரசியல் சமூகம் (21ம் பக்கம் பார்க்க)



# நில ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் மீட்கவும் புலம்பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள மாவை.சேனாதிராஜா

அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம் என முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியாவில் பெப்ரவரி 28 திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

பயங்கரவாத தடை சட்டத்தை இப்போது தொடர்ச்சியாக நாற்பது ஆண்டுகளுக்கு பின்னர் ஆனாலும் நாங்கள் ஏற்கனவே எதிர்த்து குரல் எழுப்பியிருக்கின்றோம். அதற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றோம். அவ்வாறான சூழ்நிலைகள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக எங்கள் மத்தியில் இயக்கத்தை முன்னெடுத்திருக்கின்றோம்.



நாங்கள் இப்போது தீர்மானம் எடுத்திருப்பது எங்களுடைய நிலம் நாங்கள் எங்களை ஆழ வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப்படையாக இருக்க வேண்டும். அது இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பல முனைகளில் மகாவலி, தொல்பொருளியல் அடிப்படையில் பௌத்த மயமாக்குவது, சிங்கள மயமாக்குவது, சிங்களவர்களை குடியேற்றுவது அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களுடைய நிலங்கள் பறிக்கப்படுவது அதனை விட பறிக்கப்படுவதற்கு சமமாகவும், அதற்கு அப்பாலும் இராணுவங்கள் இலட்சக்கணக்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருப்பவர்கள். பல ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எங்களுடைய பிரதேசங்களில் கைப்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இவற்றையெல்லாம் நாங்கள் மதிப்பீடு செய்யப் போகின்றோம்.

நிலத்தினுடைய விடுதலைக்காக விடிவிற்காக அதனை நாங்கள் உறுதிப்படுத்துவதற்காக எங்களுடைய சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்கு எங்கள் மண்ணை நாங்கள் ஆளுவதற்கு நிலம் எங்களுக்கு இருக்க வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். இன்று அரசினாலும் இராணுவத்தினாலும் தொடர்ந்தும் பல காரணங்களை கூறி கைப்பற்றப்படுகின்ற நிலங்களில் சிங்களவர்களை குடியேற்றி எங்களை சிறுபான்மையானவர்களாக சுயநல உரிமைக்கு தகுதியற்றவர்களாக நாங்கள் அரசியல் உரித்தை கோருவதற்கு எங்களை தகுதியற்றவர்களாக ஆக்குகின்ற மிக கொடிய போராட்டத்திலே மிக பெரிய திட்டத்தோடு இன்றைய அரசாங்கமும் ஒவ்வொரு நாளும் அந்த நிலைமைக்கு அவர்கள் ஈடுபட்டு வருவதுமல்ல அதற்கு நாங்கள் முகம்கொடுத்து பல விதமான நெருக்கடிகளை நாங்கள் ஜனநாயக ரீதியில் நிலத்தை பாதுகாக்க போராட வேண்டி இருக்கின்றோம்.

எமது மக்களை பாதுகாக்கலாம் என்பதற்காக ஒரு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்ற இலங்கை, சர்வதேச சூழ்நிலையில் நிலம் ரீதியாக முழுமையான விபரங்களையும் , வரைபடங்களையும் மக்கள் இழந்திருக்கிறார்கள் ,மக்கள் தங்களுடைய நிலத்தை எவ்வளவு இழந்திருக்கிறார்கள் அந்த நிலங்களை பாதுகாக்கவும் பறிக்கப்பட்ட அபகரிக்கப்பட்ட ,இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நாங்கள் மீட்டெடுப்பதற்காகவும் விரைவில் தமிழரசுக் கட்சியின் மாநாடு நடத்தப்பட இருக்கின்றது.

அடுத்த வாரத்தில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கூகுள் மெப் அடிப்படையில் எவ்வளவு நில வரைபடங்களை கொண்டுள்ளது. அதற்கு பின்னர் எவ்வளவு நிலங்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். இராணுவம் எவ்வளவு நிலங்களை கைப்பற்றியிருக்கின்றது, அவ் நிலங்களில் தாங்கள் குடியுரிமை கொண்டுள்ளவர்களாக உரித்துடையவர்களாக அங்கே பண்ணைகளை வைத்திருப்பதும், விவசாயத்தை செய்வதும் தொழில்பேட்டைகளை அமைப்பதும் இவ்வாறு வடக்கு கிழக்கு முழுவதும் சிங்களவர்களை குடியேற்றுவது மட்டுமல்ல இராணுவமே குடியேற்றப்பட்டவர்களாக எங்களுடைய நிலங்களை கைப்பற்றி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தங்களுடைய கையிலே வைத்திருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் சர்வதேசத்திற்கு முன்னால் முன்வைப்பது மட்டுமல்ல ஜனநாயக ரீதியாக இந்த நாட்டுக்குள்ளும், வெளியிலும் புலம் பெயர்ந்தவர்களும் நிலத்தை மீட்பதற்காக போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மாநாட்டிலே உரிய தீர்மானத்தை எடுக்க இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions,

Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டுமென இலங்கை அரசிடம் ஐ.நா. வலியுறுத்து

அது மாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக இடை நிறுத்துமாறும் அச்சட்டத்தின் கீழ் நியாயமான காரணங்களின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி




ஆரம்பமாகியுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக இடை நிறுத்துமாறும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைக்குமாறும் வலியுறுத்தி பயங்கரவாதத்தை ஒழித்தல், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் பியோனுவாலா நி ஓலெய்ன், அமைதியாக ஒன்றுகூடுதல் மற்றும் கலந்துரையாடுவதற்கான உரிமை தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நியாலெற்சொஸி வோல், மத நம்பிக்கைசார் சுதந்திரம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் அஹ்மட் ஷஹீட், சித்திரவதைகள் மற்றும் ஏனைய மனிதாபிமானமற்ற நடத்தைகள் அல்லது தண்டனைகள் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் நில்ஸ் மெல்ஸெர், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐ.நா செயற்பாட்டுக்குழுவின் தலைமை அறிக்கையாளர் லூசியானோ ஹஸன் மற்றும் அதன் ஏனைய அறிக்கையாளர்கள், தன்னிச்சையான தடுத்துவைப்புக்கள் தொடர்பான செயற்பாட்டுக்குழுவின் தலைமை அறிக்கையாளர் எலினா ஸ்ரெய்னெர் மற்றும் அதன் ஏனைய அறிக்கையாளர்கள், சிறுபான்மையின விவகாரங்கள் தொடர்பா ஐ.நா விசேட அறிக்கையாளர் ஃபெர்னாட் டி வரேனேஸ் மற்றும் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ஃபியல் சல்வியோலி ஆகியோர் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் வருமாறு:

இச்சட்டத்தின் கீழ் தன்னிச்சையாகத் தடுத்துவைக்கப்படக்கூடிய நபர்கள், குறிப்பாக இன மற்றும் மதரீதியான சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதுடன் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கான இடைவெளி சுருக்கமடையக்கூடிய சாத்தியமும் உள்ளது. எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் மேற் கொள்ளப்படும் வரையில் அச்சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக இடைநிறுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து வர்த்தக ரீதியான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தையின் ஓரங்கமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மறுசீரமைப்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தச் சட்டமூலம் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இருப்பினும் அந்தத் திருத்தங்கள் ஏற்கனவே நாம் முன்மொழிந்திருந்த பரிந்துரைகள் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருந்த கருத்துக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையவில்லை.

இலங்கையில் சுமார் 40 வருடகாலமாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தன்னிச்சையான தடுத்து வைப்புக்களுக்கும் சித்திரவதைகள் மூலம் பொய்யான வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் சிறுபான்மையினத்தவரும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களும் இலக்கு வைக்கப்படுவதற்கும் வழிவகுத்துள்ளது.

அது மாத்திரமன்றி அச்சட்டத்தின் பயன்பாடு வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கும் இடமளிக்கின்றது. சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுபவர்கள் எவ்வித குற்றச்சாட்டுமின்றி பல தசாப்தகாலமாகத் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இச்சட்டத்தின் கீழான தடுத்து வைப்புக் காலத்தைக் குறைத்தல், சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதற்கான நீதவானின் அதிகாரங்களை வலுப்படுத்தல், வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தல் ஆகிய திருத்தங்களை மேற்கொள்வதற்கான முன் மொழிவுகளை வரவேற்கின்றோம்.

இருப்பினும் அத்திருத்த முன்மொழிவுகள், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை கொண்டிருக்கும் சர்வதேசக் கடப்பாடுகளை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அமையவில்லை.

தன்னிச்சையான தடுத்துவைப்பு உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கும் வழி வகுத்துள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில மோசமான சரத்துக்களை மாற்றியமைப்பதற்கான திருத்தங்கள் அரசாங்கத்தின் தற்போதைய முன்மொழிவுகளில் உள்வாங்கப்படவில்லை.

இது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுசீரமைப்பதற்கான இலங்கையின் கடப்பாடு தொடர்பில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வை வழங்குவதற்கான உடனடிக்கடப்பாட்டை இலங்கை கொண்டிருக்கின்றது.

சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் `பயங்கரவாதம்' என்பதற்கான வரைவிலக்கணத்தை உள்ளடக்குதல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றில் சட்டம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாதிருப்பதை உறுதி செய்தல், சுதந்திரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் தன்னிச்சையான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு ஏற்றவாறான சரத்துக்களை உருவாக்கல், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்தல், நீதிமன்ற மேற்பார்வை மற்றும் சட்ட உதவியை நாடுவதற்கான வாய்ப்பு ஆகியவற்றை உறுதிசெய்தல் ஆகிய திருத்தங்களை மேற்கொள்வது குறித்து நாம் ஏற்கனவே பரிந்துரைகளை முன்வைத்திருந்தோம்.

மேலும் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு அவசியமான சட்டம், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இருப்பதை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

அத்தோடு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக இடைநிறுத்துமாறும் அச்சட்டத்தின் கீழ் நியாயமான காரணங்களின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**Basement for Rent**

**Mccowan & Mcnical**

**1 Room apartment for Rent**
**(perfer couples or small family)**

**call: 647 459 0097**

**LAW OFFICE of THELMA WILLIAMS**

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- REAL ESTATE
- WILLS and ESTATES
- EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ADMINISTRATIVE LAW
- POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- தொழில்சார் சட்டம்
- நிர்வாக சட்டம்
- சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# உக்ரேன் மீதான ரஷ்யாப் போரை நிறுத்தக் கோரும் தீர்மானம் ஐ.நா.பொதுச்சபையில் நிறைவேற்றம்! இந்தியா, சீனா பங்கேற்கவில்லை!

உக்ரைனுக்கு எதிரான படைப் பலப் பியோகத்தை உடனடியாக நிறுத்திப் படைகளை அங்கிருந்து முற்றாக அகற்றுமாறு ரஷ்யாவைக் கோருகின்ற பிரேரணை ஐ. நா. பொதுச் சபையில் மிகப் பெரும் ஆதரவுடன் நிறைவேறி யிருக்கிறது.

சபையின் 193 உறுப்பு நாடுகளில் 141நாடுகள் பிரேரணையை ஆதரித்தும் ஐந்து நாடுகள் எதிர்த்தும் வாக்களித் திருக்கின்றன. சீனா, இந்தியா உட்பட குறைந்தது 35 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ரஷ்யா, பெலா ரஸ், வடகொரியா, சிரியா எரித்திரியா ஆகியன எதிர்த்து வாக்களித்தன.




மொஸ்கோ உடனடியாக, முழுமையாக மற்றும் நிபந்தனையின்றி அனைத்து இராணுவப் படைகளையும் திரும்பப் பெற வேண்டும் என்று அத் தீர்மானம் கோருகிறது. தனது அணு ஆயுதப் படைகளது ஆயத்த நிலையை அதிக ரித்தமைக்காக ரஷ்யா மீது தீர்மானம் கடும்கண்டனத்தையும் வெளியிட்டு ள்ளது.

ஐ. நா. பொதுச் சபையின் அவசரகாலக் கூட்டம் கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்று வந்தது. வாக்கெடுப்பின் முடிவு அறிவிக்கப்பட்டபோது சபையில் பலத்த கரகோஷத்துடன் அது வரவேற் கப்பட்டது.

பொதுச்சபை இவ்வாறு அவசரமான கூட்டம் ஒன்றைநடத்துவது 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவே முதல் முறையாகும்.பொதுச் சபையின் இன் றைய தீர்மானம் போர் மேலும் தீவிர மாகுவதற்கே வழிவகுக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யத் தூதர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.


உக்ரைனில் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வந்து தனது படைகளை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்றுகோரும் பிரேரணை முதலில் பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப் பட்ட போது மொஸ்கோ தனது வீற்றோ அதிகாரத்தினால் அதனை நிறைவேற்ற விடாது தடுத்து விட்டது

அந்த வாக்கெடுப்பிலும் சீனாவும் இந்தியாவும் கலந்து கொள்ளாது விலகி யிருந்தன என்பது தெரிந்ததே. பாது காப்புச் சபையில் பிரேரணை தோற்கடி க்கப்பட்டதை அடுத்தே பொதுச் சபை யின் அவசரகாலக் கூட்டத்தைக் கூட்டி அதிலே உறுப்பு நாடுகளது ஆதரவுடன் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது


## விண்வெளியிலும் அமெரிக்கா - ரஷ்யா பதற்றம்?

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உருவாகி இருக்கின்ற போர்ப்பதற்றம் விண்வெளியில் இரு நாடுகளினதும் கூட்டுச் செயற்பாடுகளில் எந்தப்பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அங்குஅமைதி நிலவுகிறது என்பதை நாசாஅதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தி யுள்ளார்.

எனினும் சர்வதேச விண்வெளி நிலைய த்தை (international space station) ரஷ்யாவின் துணையின்றி அதன் சுற்றுப் பாதையில் வைத்திருப்பதற்கான தீர்வு ஒன்றை காண்பதற்கான முயற்சி களில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து ஈடுபட்டு வரு கிறது எனத் தகவல் வெளியாகி உள் ளது.உக்ரைன் ஆக்கிரமிப்புக் காரண மாக ரஷ்யா சர்வதேச அளவில் ஒதுக் கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் விண்வெளி பாதுகாப்புத் தொடர்பான கவலைகள் எழுந்துள்ளன. சர்வதேச விண்வெளி நிலையம் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இரு பக்கத்து விண்வெளி அறிவியல் குழு



(international space ளவயவழைெ) அமெரிக்கா -ரஷ்யா இரு நாடுகளின தும் கூட்டு நடவடிக்கைகளால் வெற்றி கரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உக்ரைன் போர்ப் பதற்றம் அதில் எந்தத் க்களும் வழமைபோலத் தங்களுக்குள் தொடர்புகளையும் பரிமாற்றங்களையும் பேணிக்கூட்டாக இயங்கி வருகின்றன. எனினும் நாசா (NASA) நிலைமையை மதிப்பீடு (20ம் பக்கம் பார்க்க)

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

15 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை
பிரதோஷ விரதம்

18 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை
பங்குனி உத்தரம்

உபயம்:-
ச.நிருஜன், தனுஷன், ஈஸ்வர்

02 ஏப்ரல் 2022 சனிக்கிழமை
கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன்
ஆலயத்தின் 10வது வருடாந்த
மகோற்சவம் ஆரம்பம்

பங்குனி உத்தரத் தினத்தன்று பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை
மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக தமிழரசுக்கட்சி தனி ஓட்டம்?

தமிழரசுக்கட்சி பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக ஒரு கையெழுத்து வேட்டைப் போராட்டத்தை நடத்தி வருகிறது. இப்போராட்டத்திற்கு மூவினத்தவர்கள் மத்தியிலும் ஆதரவு இருக்கிறது. தமிழ் பகுதிகள் எங்கும் தமிழரசுக்கட்சியினர் பொது இடங்களில் நின்று கையெழுத்துக்களை வாங்கி வருகிறார்கள்.

சுமந்திரன் தென்னிலங்கையில் உள்ள பிரமுகர்களைத் தேடிச் சென்று கையெழுத்து வாங்கி வருகிறார். அவருடைய இம்முயற்சிக்கு விக்னேஸ்வரன் உட்பட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும்




ஆதரவைக் காட்டியுள்ளன. ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டம் முஸ்லிம்களுக்கும் எதிராகத் திரும்பியது. அதனால் இப்பொழுது சுமந்திரனின் போராட்டத்துக்கு முஸ்லிம்கள் மத்தியிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆதரவு காணப்படுகிறது.

அதேசமயம் ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னால் உள்ள சூழ்ச்சிகளை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டு அரசாங்கத்தோடு முரண்பட்டுக் கொண்டிருக்கும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித்தும் அப்போராட்டத்தில் கையெழுத்து வைத்துள்ளார். அதை விட முக்கியமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க கையெழுத்திட்டுள்ளார். இப்போராட்டத்திற்கு உள்நாட்டிலும் கொழும்பில் உள்ள மேற்கு நாட்டு தூதரகங்கள் மத்தியிலும் உலகெங்குமுள்ள மனித உரிமை அமைப்புக்கள் மத்தியிலும் ஆதரவு உண்டு.

இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட கால கட்டம் முக்கியத்துவமானது. ஜெனிவா கூட்டத் தொடர் இம்மாத இறுதியில் தொடங்குகிறது. அதே சமயம் வரும் ஏப்ரல் மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் கூடும். அதில் இலங்கை அரசாங்கத்துக்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதா இல்லையா என்ற முடிவு எடுக்கப்பட இருக்கிறது.

இம்முடிவு பயங்கரவாத தடைச் சட்டத்தோடு தொடர்புடையது. பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது அதை அனைத்துலகத் தரத்துக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கேட்கின்றது. அதை ஒரு முன் நிபந்தனையாக முன் வைக்கின்றது. அதனால் அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் திருத்தப்பட்ட வடிவம் ஒன்றை கொண்டு வரப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கிறது. ஆனால் திருத்தப்பட்ட அந்த வடிவத்தையும் மனித உரிமை அமைப்புகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினரும் சட்ட விற்பன்னர்களும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்றக்கோரி சுமந்திரன் தொடங்கியிருக்கும் கையெழுத்து வேட்டை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் அரசியல் செயற்பாட்டாளர்கள் மனித உரிமை அமைப்புக்கள் போன்றவற்றின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இப்படி ஒரு நேரத்தில் இப்படி ஒரு போராட்டத்தை சுமந்திரன் தலைமையில் தமிழரசுக்கட்சி முன்னெடுப்பதை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதே சமயம் சில அடிப்படைக் கேள்விகளையும் இங்கே கேட்க வேண்டும்.

முதலாவது கேள்வி தமிழரசுக்கட்சி கடந்த ஆட்சியின் போது ரணில் — மைத்திரி அரசாங்கத்தின் மறைமுகப் பங்காளியாக இருந்தது. மிகக் குறிப்பாக மைத்திரிபால சிறிசேன ஒரு யாப்புச் சதி முயற்சியை முன்னெடுத்த பொழுது ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தது சுமந்திரனே என்று பாராட்டப்பட்டது. அதாவது இலங்கைத்தீவின் ஜனநாயகத்தை பாதுகாத்தவர் என்று அவருக்கு மகுடம் சூட்டப்பட்டது. அந்தளவுக்கு தென்னிலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்தியோடு காணப்பட்ட சுமந்திரனும் கூட்டமைப்பும் அந்த ஆட்சிக் கால கட்டத்திலேயே ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க முயற்சிக்கவில்லை? அது தொடர்பாக ரணில் — மைத்திரி அரசாங்கத்தின் மீது ஏன் நிர்ணயகரமான விதங்களில் அழுத்தத்தைப் பிரயோகிக்கவில்லை? ஆட்சியின் மறைமுகப் பங்காளிகளாக இருந்த கால கட்டத்தில் செய்யத் தவறிய ஒன்றை ஏன் இப்பொழுது செய்கிறார்கள்?

இது தொடர்பில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த மைத்திரிபால சிறிசேனவின் கட்சி மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் சுட்டிக் காட்டியிருக்கிறார். அங்கஜன் அதை சுமந்திரனுக்கு எதிரான குற்றச் சாட்டாக முன் வைக்கிறார். ஆனால் அப்போது ஆட்சியில் இருந்தது அவரும் அங்கம் வகித்த ஓர் அரசாங்கம்தான். எனவே முடிவெடுக்கும் நிலையில் இருந்தது மைத்திரியும் அவருடைய அரசாங்கமும் தான். எனவே இதில் முதல் குற்றச்சாட்டு மைத்திரிபால சிறிசேனவின் கட்சியை நோக்கித் தான் முன் வைக்கப்பட வேண்டும். அங்கஜன் சுமந்திரன் மீது பழியைப் போட்டுவிட்டு அவர் தப்ப முடியாது.

இரண்டாவது கேள்வி இதில் சந்திரிக்கா போன்றவர்கள் கையெழுத்து வைத்திருக்கிறார்கள். இது விடயத்தில் சந்திரிகாவிடம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்ற ஒரு விவாதம் முன் வைக்கப்படலாம். எனினும் 10 ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஒருவர் தான் செய்யத் தவறிய ஒன்றை இப்பொழுது செய்ய வேண்டும் என்று கூறுவதை எப்படி விளங்கிக் கொள்வது? தான் அதிகாரத்தில் இருந்தவரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்றுவரை சிறையில் இருப்பவர்களுக்கு அவர் பதில் கூறுவாரா? இது ஒரு அடிப்படையான கேள்வி. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் கருத்துக் கூறும் பலரும் அதிகாரத்தில் இருந்து ஓய்வு பெற்றபின் தமிழ்மக்களின் நியாயங்களை கதைப்பதை நாம் பார்க்கிறோம். உள்நாட்டு அரசியல்வாதிகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு ராஜதந்திரிகள் அரசுத் தலைவர்கள் பலரும் அவ்வாறு கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக இந்திய ராஜதந்திரிகள் பலர் அவ்வாறு தவறு நடந்து விட்டது என்பதனை ஓய்வு பெற்ற பின்னர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது போலவே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் ஓய்வு பெற்றபின் ஈழத் தமிழர்களுக்கு சாதகமான உண்மைகளை தனது சுயசரிதையில் எழுதியிருக்கிறார். இலங்கை இனப்பிரச்சினையில் தாம் பதவியில் முடிவெடுக்கும் அதிகாரத்தில் இருந்த போது முடிவெடுக்காத பலரும் ஓய்வூதியர்கள் ஆனபின் ஞானம் பெற்று நீதிக் கதைகளை எழுதுகிறார்கள். திருமதி சந்திரிகாவின் விடயமும் அத்தகையதே. அவருடைய கைகளிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் கண்ணீரும் இரத்தமும் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

மூன்றாவது கேள்வி ஏற்கனவே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் ஏனைய கட்சிகளுமாக மொத்தம் 5 கட்சிகள் இணைந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான ஒரு கூட்டுக் கடிதத்தை தயாரிக்கப் போவதாக அறிவித்திருந்த ஒரு பின்னணியில் சுமந்திரன் இது விடயத்தில் தனி ஓட்டம் ஓடக் காரணம் என்ன? குறிப்பாக இந்தியாவுக்கு கடிதம் எழுதும் விடயத்தில் சுமந்திரனும் கடைசி கட்டத்தில் அதில் பங்காளியாக மாறினார். இப்போது அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல அவர் காட்டிக் கொள்கிறார். ஆனால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட இறுதி ஆவணத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பலவற்றுக்கு அவரும் பொறுப்பு. ஒரு புறம் ஆறு கட்சிகளோடு இணைந்து ஒரு கூட்டு ஆவணத்தை இறுதியாக்கிய அவர் இன்னொருபுறம் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான ஒரு போராட்டத்தில் ஏனைய ஐந்து கட்சிகளையும் ஒன்றிணைக்காது தனி ஓட்டம் ஓடுகிறார். அதோடு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரை தமிழரசுக் கட்சி தனியாகச் சந்தித்திருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பு ஒன்றுடன் சேர்ந்து தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியிருக்கிறது. கடந்த 16ஆம் திகதி யாழ் நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் இந்தியாவுக்கு கடிதத்தை அனுப்பிய ஆறு கட்சிகள் இணைந்து ஒரு கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியிருந்தன. அக்கருத்தரங்கில் தமிழரசுக் கட்சி பங்குபற்றவில்லை.

அதன் தலைவர் உடல்நலக் குறைபாடு காரணமாக வரவில்லை என்று கூறப்பட்டது. அப்படி என்றால் ஒரு பிரதிநிதியை அனுப்பி இருந்திருக்க வேண்டும். அதுவும் நடக்கவில்லை. கருத்தரங்கில் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்களையும் காண முடியவில்லை. ஆனால் அதே நாளில் காலையில் யாழ் நகரப் பகுதியில் நடந்த சுமந்திரனின் கையெழுத்து வேட்டைப் போராட்டத்தில் முதல் ஆளாக மாவை தனது கையெழுத்தை வைத்திருக்கிறார். இது உள்நோக்கமுடையது இல்லையா?

தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. ஏனைய கட்சிகளோடு இணைந்து கூட்டாக இந்தியாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பி விட்டு அதை அனுப்பிய கையோடு தனியாக ஒரு போராட்டத்தை முன்னெடுக்கின்றது. கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலப்பறிப்புக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒன்றாக நின்றதுபோல பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகவும் ஒன்றாக நிற்காதது ஏன்? இந்தப் போராட்டத்தில் திருமதி சந்திரிக்காவையும் கர்தினால் மல்கம் ரஞ்சித்தையும் இணைப்பதற்கு முன் கூட்டமைப்புக்குள் உள்ள பங்காளிக் கட்சிகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட எல்லாக் கட்சிகளையும் சிவில் அமைப்புக்களையும் ஓரணியில் திரட்டியிருக்க வேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சி அவ்வாறு செய்யவில்லை. அது தனியோட்டத்துக்குத் தயாராகிறதா?


## மிஸிசாகா பகுதியில் மிகச் சிறப்பாக இயங்கும் south indian உணவகத்திற்கு

**முழுநேர - பகுதி நேர வேலையாட்கள் உடனடியாகத் தேவை**

parotta , roti, kothu parotta/ kothu Roti, Dosa and other south indian dishes (பரோட்டா, றொட்டி, கொத்துப் பறோட்டா, கொத்து றொட்டி, தோசை, வடை உட்பட) தென்னிந்திய உணவு வகைகள் தயாரிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த சமையல்காரர் (chef / cook / kitchen helper) குசினி உதவியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

TASTY FOODS - (South Indian Takeout Restaurant)
3870 Eglinton Avenue West, Unit 52,
Mississauga, ON, L5M 2R9

**Contact phone number : 647-535-6167**

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 பெப்ரவரி 2022 முதல் 06 மார்ச் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 04 மார்ச் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மார்க்கண்டு மனோன்மணி
### திரு செல்லர் மார்க்கண்டு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் தந்தையாரது நினைவையும் சேர்த்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். தாய், தந்தையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்ரரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 06 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி ஜெசிமேரி யோசப்பின் எற்வேட் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செல்வநாயகிஅம்மா அருளானந்தம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வநாயகிஅம்மா அருளானந்தம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 02 மார்ச் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செல்வநாயகிஅம்மா அருளானந்தம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு அப்பாத்துரை அருமைராஜா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு அப்பாத்துரை அருமைராஜா அவர்களுடைய எட்டாவது ஆண்டு நினைவு நாள் 05 மார்ச் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திரு அப்பாத்துரை அருமைராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி (ஓவசியர்) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் கனகசபை ஐயாத்தைப்பிள்ளை கல்விக்கழகம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி (போசகர் விஸ்வலிங்கம் சின்னத்தம்பி ஓவசியர்) நிர்வாக கனடா அமைப்பு. அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி (ஓவசியர்) அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



26 பெப்ரவரி 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வி காயத்திரி புஸ்பராஜ் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி காயத்திரி அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



26 பெப்ரவரி 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வி காயத்திரி புஸ்பராஜ் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி காயத்திரி அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



27 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி ஜோர்ஜ் பற்றீமா அவர்கள்து பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி பற்றீமா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி மீரா லிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி மீரா லிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



01 மார்ச் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சண்முகநாதன் குடும்பம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



02 மார்ச் 2022 புதன்கிழமை வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வநாயகிஅம்மா அருளானந்தம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது 10வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி (ஓவசியர்) அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் கனகசபை ஐயாத்தைப்பிள்ளை கல்விக்கழகம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி (போசகர் விஸ்வலிங்கம் சின்னத்தம்பி ஓவசியர்) நிர்வாக கனடா அமைப்பு. அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


TORONTO THIRUCHENDUR MURUGAN TEMPLE
றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

19 Penn Dr, North York, ONM9L 2A7, Tel:- 416 744 9568 or 647 748 7478
Facebook: facebook.com/torontomurugan. Website: tmurugan6.wix.com/toronto.
YouTube: youtube.com/torontothiruchendurmurugantemple, Email: torontomurugan@gmail.com

**றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய**
**மகாசபை கூட்டம் பற்றிய அறிவித்தல்**

24/02/2022

றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிரந்தர அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது.

எமது ஆலய பொதுக்கூட்டம் எதிர் வரும் சித்திரை மாதம் 17/04/2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைகூட்டத்தில்

- ✔ வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்
- ✔ ஆலய அடைமானக்கடனை திரும்ப செலுத்துவற்கான பொறுப்பேற்றல்
- ✔ எதிர் வருங்காலங்களில் புனரமைப்பு பணிகள் பற்றிய கலந்துரையாடல்
- ✔ புதிய நிர்வாகசபை தேர்வு
- ✔ உப நிர்வாகசபை தேர்வு

என்பன இடம் பெறும்

அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதால் இதுவரை அங்கத்தவர்கள் ஆகாதவர்கள் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்களுடைய பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு**
அங்கத்துவம் தனிநபருக்கானதே தவிர குடும்பத்தினருக்கானது அல்ல ஒரு அங்கத்துவ கட்டணம் தனி ஒரு நபருக்கானதே என்பதனையும் அறியத்தருகின்றோம்

மகாத்மநாதன் கதிர்காமநாதன்
செயலாளர்
றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

24/02/2022

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759


இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


# Amma Pawn Broker
# அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0%** முதல் **1.5%** வரை

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# TAX CENTRIC
2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1


உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

## Insurance can seems confusing
## It doesn't have to be.
*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம்
அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால்
பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®
Life | Health | Auto | Home | Travel | Wealth

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5


Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER



## Master : KASHI GURUJI

Over 40+ Years of Experience

**Horoscope, Hand & Face Reading, Know your Past, Present & Future**

கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகம் விளக்கம், வெத்திலையில் மை போட்டுப் பார்த்தல், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அறிதல்



- ★கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- ★சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- ★திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- ★தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- ★லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- ★விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ★ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- ★பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- ★கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.

உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும். All Religions welcome.

- ★Money Blessings
- ★Love Problem
- ★Health Problem
- ★Relationship Problem
- ★Husband & Wife Disputes
- ★Family Arguments
- ★Depression
- ★Sexual Problem
- ★Business Problem

PRIVATE & CONFIDENTIAL

- ★Peoples's Jealousy
- ★Enemy Problem &
- ★Marriage Problem

Get all your problems solved.

Specialist in bringing back loved ones.

Black Magic Removal in 24hours.

Open 7 days

100% Result Guaranteed. Give life long protection

Call for Appointment

**647-324-9991 | 437-833-7796**

Unit 16, 2857 Lawrence Ave East Scarborough, M1P 2S8 / 2891 A, Derry Road East Mississauga, ON, L4T 1A6

# தனித்து விடப்படும் பாதிக்கப்பட்ட மக்கள்!



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கில் மூன்று மாவட்டங்களில் மூன்று வேறு அரசியல் நிகழ்வுகள் இடம் பெற்றன. முதலாவது யாழ்ப்பாணம் வடமராட்சியில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபகுதிக்கான மாநாடு. இரண்டாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப் பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாடு. மூன்றாவது கிளிநொச்சியில் இடம் பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் நீதி கோரிய ஒரு கவனயீர்ப்புப் போராட்டம்.

இம் மூன்றும் ஒரே நாளில் இடம் பெற்றன. இதில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு ஒப்பீட்டளவில் அதிக தொகையினர் வந்திருந்தார்கள். மாநாட்டுக்காக ஆயிரக்கணக்கானவர்கள் வாகனங்களில் ஏற்றி இறக்கப்பட்டதாகவும் அதற்கு அரச வளங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. பல்லாயிரக் கணக்கானவர்கள் அந்த மைதானத்தில் கூடி இருந்தார்கள்.

இரண்டாவது நிகழ்வு முல்லைத்தீவில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாடு. இதிலும் ஒப்பீட்டளவில் மண்டபம் நிறைந்த தொகையினர் பங்கு பற்றியிருந்தார்கள். வெற்றிகரமாக இடம் பெற்ற இந்த மாநாடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அண்மைய மாதங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்றாவது பெரிய பொது நிகழ்வு ஆகும். குமார் பொன்னம்பலம் நினைவுப் பேருரை. கிட்டு பூங்கா ஆர்ப்பாட்டம் ஆகியவை ஏனைய இரண்டு நிகழ்வுகள் ஆகும்.

மூன்றாவது நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரிய பிரம்மாண்டமான கவனயீர்ப்புப் போராட்டம் என்று அழைப்பு வந்தது. ஆனால் அதில் கிட்டத்தட்ட 200 பேர்கள் தான் கலந்து கொண்டார்கள். பொத்துவில் பொலிகண்டி வரை மக்கள் அமைப்பின் இணைத் தலைவர்களில் ஒருவரான வேலன் சாமியாரும் சிறீதரன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட மிகச் சிலரைத் தவிர பெரும்பாலான அரசியல்வாதிகள் அந் நிகழ்வில் பங்கு பற்றவில்லை. மக்களும் அதிகளவு பங்கு பற்றறவில்லை.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் தலைவர்களில் ஒருவராகிய லீலாவதி மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்தில் அதிகளவு மக்கள் கலந்து கொள்ளாததையிட்டு அதிருப்தி தெரிவித்திருந்தார். அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்களில் அநேகர் பங்கு பற்றவில்லை என்றும் சுட்டிக் காட்டியிருந்தார். இப்படிப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அரசியல்வாதிகள் தான். ஆனால் மிகக் குறைந்த தொகை அரசியல்வாதிகள் தான் அன்றைய கவனயீர்ப்பில் காணப்பட்டார்கள் என்றுமவர் கூறினார். அது ஒரு பிரம்மாண்டமான கவனயீர்ப்பு அல்ல.

அன்று நடந்த மூன்று நிகழ்வுகளிலும் ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த தொகையினர் பங்கு பற்றியது அதில் தான். ஆனால் அதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு போராட்டம். அது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு போராட்டமும் கூட. கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக போராடும் ஒரு தரப்பு அதுதான். மிகச்சில முதிய அன்னையர்கள் காணாமல் போன தமது உறவுகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். முன்னைய ஆண்டுகளில் நடந்த இது போன்ற கவனயீர்ப்பு போராட்டங்களில் அதிக தொகை மக்களும் கட்சிகளும் பல்கலைக்கழக மாணவர்களும் சிவில் சமூகங்களும் பங்கு பற்றுறுவது உண்டு. ஆனால் இம்முறை அவ்வாறான பங்களிப்புக்கள் எவையுமின்றி அக்கவனயீர்ப்புப்



போராட்டம் நடந்து முடிந்தது. வடக்கில் ஒரே நாளில் மூன்று வெவ்வேறு மாவட்டங்களில் இடம்பெற்ற மூன்று நிகழ்வுகளையும் தொகுத்து பார்க்கும் பொழுது என்ன தோன்றுகிறது? மக்கள் பங்களிப்பு என்று பார்த்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டைத் தான் முதலாவதாகக் குறிப்பிடலாம். ஆனால் அதில் கலந்து கொண்ட பலரும் உண்மையான கட்சித் தொண்டர்கள் அல்லவென்றும் அரச வளங்களைப் பயன்படுத்தி அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் அவ்வாறு ஏற்றி இறக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது ஒரு புதிய விடயமல்ல. கடந்த 30ஆம் திகதி கிட்டு பூங்காவில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதும் அவ்வாறு ஒரு தொகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி இறக்கப்பட்டதாக ஒரு விமர்சனம் உண்டு. பொதுக் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றுக்கு மக்களை ஏற்றி இறக்குவது என்பது தென்னாசிய ஜனநாயகத்தின் ஒரு முக்கிய பண்பு.

ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்ற மக்கள் மயப்பட்ட பொது நிகழ்வுகளின் வெற்றிகளுக்குப் பின்னால் எப்பொழுதும் ஒரு மிகப்பெரிய பட்ஜட் இருக்கும். தென்னிலங்கையில் இடம்பெறும் கட்சிக் கூட்டங்கள் எல்லாவற்றுக்கும் அவ்வாறான பட்ஜட் உண்டு. அண்மையில் அனுராதபுரத்தில் ஆளும் கட்சி நடத்திய பெரும் கூட்டத்துக்கும் ஒரு பெரிய பட்ஜட் இருந்தது. இப்பொழுது எதிர்க்கட்சிகள் அதற்குச் சவாலாக ஒரு பெரிய கூட்டத்தை ஒழுங்குபடுத்தி வருகின்றன. அங்கேயும் நிச்சயமாக பட்ஜட்றின் அளவு தான் கொண்டு வரப்படும் கூட்டத்தின் அளவையும் தீர்மானிக்கும். அதிகம் போவான் ஏன்? தமிழ் மக்கள் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட எழுக தமிழ் நிகழ்வுகளின் போதும் அவ்வாறு ஒரு பட்ஜட் இருந்தது. எனவே மக்கள் மயப்பட்ட எல்லா அரசியல் நிகழ்வுகளிலும் அவற்றின் வெற்றியை தீர்மானிப்பது பெருமளவுக்கு பட்ஜெட்டும் தான்

இப்படிப் பார்த்தால் கடந்த 16ஆம் திகதி யாழ். கிட்டு பூங்கா ஆர்ப்பாட்டம் இளங்கலைஞர் மண்டபத்தில் நடந்த ஆறு கட்சிகளின் கருத்தரங்குக்கு அப்படிப்பட்ட பட்ஜட் ஏதும் இருக்கவில்லையா? என்ற கேள்வி எழும். அது ஒரு கருத்தரங்கு. எழுச்சிப் போராட்டம் அல்ல. ஆனாலும் தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது இருப்பது தேர்தல் மைய அரசியல் தான். தேர்தல் மையக் கட்சிகள் தான். அரசியல் எனப்படுவது தலைகளை எண்ணும் அரசியல் தான். ஆனால் இளங்கலைஞர் மண்டபத்தில் கருத்தரங்கை ஒழுங்குபடுத்திய கட்சிகள் அதிக தொகை ஆட்களைத் திரட்ட வேண்டும் என்று திட்டமிடவில்லைப் போல் தெரிகிறது. அவர்கள் தெரிந்தெடுத்த மண்டபமே அதைக் காட்டுகிறது. அங்கே 400க்கும் குறையாத தொகையினர் தான் கூட. ஒப்பீட்டளவில் பெரிய கூட்டத்தை கூட்டுவது என்றால் வீரசிங்கம் மண்டபம் தான் பொருத்தமானது. அதை விடப் பெரிய கூட்டம் என்றால் ஒரு பொது மைதானத்தை தெரிந்தெடுக்கலாம். கிட்டு பூங்கா கூட சுமாராக இரண்டாயிரம் பேரை உள்ளடக்கும் ஒரு மைதானம் தான். எனவே தேர்ந்தெடுக்கப்படும் மைதானம் அல்லது மண்டபம் போன்றவை எவ்வளவு ஆட்களைத் திரட்ட போகிறோம் என்று குறிப்பிட்ட கட்சி முன்கூட்டியே மனதில் வைத்திருக்கும் ஒரு கணக்கைக் காட்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் இளங்கலைஞர் மன்றத்தில் கருத்தரங்கை ஒழுங்குபடுத்திய ஆறு கட்சிகளும் மிகப் பலவீனமான பட்ஜெட்டைக் கொண்டிருந்தனவா? அப்படி என்றால் ஆறு கட்சிகளின் பின்னணியில் நிற்பதாக குற்றம் சாட்டப்படும் இந்தியா அவர்களுக்கு நிதி உதவிகளை வழங்கவில்லையா?

இவ்வாறாக கடந்த சில மாதங்களில் நடந்த பொது நிகழ்வுகளை தொகுத்து பார்த்தால் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு அரசியல்வாதியும் தத்தமது பலத்தை நிரூபிப்பதற்காக அதிக தொகை மக்களை அரங்கிற்கு அல்லது மைதானத்திற்கு அழைத்து வருகிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை ஓரணியில் நின்று பலப்படுத்தும் நோக்கம் எதுவும் கட்சிகள் மத்தியில் இருப்பதாக தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒரு போராட்டத்தை ஒழுங்குபடுத்திய அதே காலப்பகுதியில் தான் தமிழரசுக்கட்சியின் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான போராட்டமும் போய்க் கொண்டிருக்கிறது. அது முல்லைத்தீவில் முதலில் தொடங்கியது. இப்பொழுது நாடு முழுவதிலும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. அப் போராட்டத்தை சுமந்திரனே முன்னின்று நடத்துகிறார். ஆறு கட்சிகளாக இணைந்து இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை அனுப்பிய கையோடு தமிழரசுக்கட்சி தனியாக ஏன் ஒரு கையெழுத்து வேட்டையைத் தொடங்கியது?

இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் ஒருபுறம் சுமந்திரன் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுக்கிறார். இன்னொரு புறம் கட்சிகள் தனித்தனியாக மாநாடுகளையும் கூட்டங்களையும் ஒழுங்குபடுத்துகின்றன. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் சாதாரண கவனயீர்ப்பு போராட்டமாக நடந்து முடிந்திருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் காணிக்கான போராட்டம் அரசியல் கைதிகளுக்கான போராட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான போராட்டம் போன்ற அனைத்துப் போராட்டங்களும் ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்கப்பட்டு ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலின் கீழ் அனைத்து கட்சிகளையும் இணைத்து முன்னெடுக்கப்பட வேண்டியவை.

ஆனால் கடந்த 12 ஆண்டுகளில் மிக அரிதாகத்தான் கட்சிகள் அவ்வாறு ஒன்றிணைந்துள்ளன. கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்துக்கு வெளியே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலப்பறிப்புக்கு எதிராக ஒன்றாக நின்றார்கள். ஆனால் கட்சிகளாக ஆளுக்காள் மோதுகிறார்கள். பொதுப் போக்கு என்னவெனில் கட்சிகள் தனித்தனியாக கூட்டங்களை நடத்தும், மாநாடுகளை நடத்தும், ஆர்ப்பாட்டங்களை நடத்தும் என்பதுதான். அதாவது தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுவதை விடவும் கட்சிகளைப் பலப்படுத்துவது தான் அவர்களுடைய நோக்கம்.



# 13வது திருத்தமும் தமிழ் அரசியல் சமூகமும் ஒரு யதார்த்த அணுகுமுறை!

கட்டுரையாளர்:
கலாநிதி
நிர்மலா சந்திரஹாசன்



## 2

(சென்றவாரத் தொடர்ச்சி) 13ஆவது திருத்தத்தின்படி நிறைவேற்று அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருந்தாலும் ஆளுநர் மாகாண மந்திரிகள் சபையூடாக அல்லது மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஊடாகவே இந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். அதேவேளை முதலமைச்சரும் மந்திரிகள் சபையும் ஆளுநர் எவ்வாறு செயற்படவேண்டும் என்கிற ஆலோசனையை வழங்குவதோடு ஆளுநர் எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்த ஆலோசனைக்கு அமையவே செயற்படுதலும் வேண்டும். இந்த நடைமுறைக்கு விதிவிலக்காக உள்ள விடயமும் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அரசியல் யாப்பில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் மாத்திரம் ஆளுநர் தனது தீர்மானத்திற்கு இசைவாக செயற்படலாம்.



இந்திய அரசியல் யாப்பிலும் இது போன்றே நிறைவேற்று அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருப்பினும் அங்கு வெஸ்ற்மின்ஸ்ரர் ஆட்சி முறைமையில் முதலமைச்சரின் ஆலோசனையின்படியே ஆளுநர் செயற்படுகிறார். ஆளுநர் என்பவர் பெயரளவிலான தலைமையை வகிக்கும் ஒருவராகவே செயற்படுகிறார். மாறாக இலங்கையில் தமிழரை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களில் ஆளுநர்கள் பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்கள் போல் அதிகாரங்களைப் பிரயோகிப்பதைக் காணலாம். மாகாண அரசு நடைமுறையில் நிதி அதிகாரத்தை பொறுத்தவரையில் ஆளுநரின் அதிகாரக் கட்டுப்பாடு மிகவும் துல்லியமாக தெரியும்.

மாகாண சபையை நடத்துவதற்கு நிதி அவசியம். நிதியை பெறுவதில் உள்ள தடையே மாகாண சபைகள் முழுமையாக செயற்பட முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணியாக இருக்கிறது. மாகாண சபை சட்டத்தினூடாகவே மாகாணத்தின் நிதிக் கட்டுப்பாட்டை ஆளுநர் பெறுகின்றார். மாகாணத்துக்கான நிதியமும் ஆளுநரின் கீழேயே உள்ளது. ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் வரி விதிப்பு, வரி விலக்கு போன்றவற்றுக்கான சட்ட மூலங்களை மாகாண சபை நிறைவேற்ற முடியாது. 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட மத்திய அரசுக்கும் — மாகாணங்களுக்குமான உறவுகள் தொடர்பான பாராளுமன்ற உப குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டியது போன்று அரசியல் யாப்பின் கட்டமைப்பானது வரி விதிப்புகளின் மூலம் நிதி திரட்டும் மாகாண அரசின் முயற்சிகளை கடுமையாக கட்டுப்படுத்துகின்றது. இதன் காரணமாகவே மாகாண சபைகள் தமது நிதித் தேவைகளுக்கு பெருமளவில் மத்திய அரசினது கொடுப்பனவுகளிலேயே தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக திருத்தி வரையப்பட வேண்டிய மற்றொரு விடயம் நிர்வாக கட்டமைப்பு தொடர்பானதாகும். மாகாண சபைகளை திறனுடன் நிர்வகிப்பதற்கு நிதிகளின் மீதான கட்டுப்பாடுகள் மட்டும் போதாது. அதனுடன் நன்கு வரையறுக்கப்பட்ட திறன்களைக் கொண்ட நிர்வாக பிரிவுகளின் மீதான கட்டுப்பாடுகளும் அவசியமாகும். தற்பொழுது மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் என்போர் மத்திய அரசின் கீழேயே செயற்படுகின்றனர். இந்த உத்தியோகத்தர்கள் மாகாண சபைக்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே தமது நிர்வாக கடமைகளை புரிகின்றார்கள். ஆனால், இந்த உத்தியோகத்தர்கள்மீது மாகாண சபை நிர்வாகத்திற்கு எதுவித கட்டுப்பாடும் கிடையாது. உள்ளூராட்சி நிர்வாகங்கள் மாகாண சபைக்கென பகிர்ந்தளிக்கப்பட்ட நிரலின் மூலம், மாகாண சபை நிர்வாகத்தின் மேற்பார்வை கட்டுப்பாட்டுக்குள் இருப்பினும் உள்ளூர் மட்டத்தில் அவை மத்திய அரசின் அங்கமாகவே செயற்படுகின்றன. மாகாண சபை நிர்வாகம் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு மாகாண அரசின் செயற்பாட்டு எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படல் வேண்டும். நடைமுறையில் மாகாண அரசிற்கென பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்ச்சியாக மத்திய அரசினால் அத்துமீறப்படுகின்றன. அதிகார பகிர்வு தொடர்பாக மத்திய அரசுக்கென ஒதுக்கப்படட நிரல் 2இல், 'எல்லா விடயங்களிலுமான தேசிய கொள்கைகள்' என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான தலைப்பு, மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட விடயங்கள் உட்பட சகல விடயங்களையும் மத்திய அரசே எடுத்துக்கொள்ள வழி வகுத்துள்ளது.



தேசிய கொள்கைகள் என்றால் என்ன? தேசிய தரம் என்பதை எவ்வாறு தீர்மானிப்பது? என்பது போன்ற விடயங்கள் அனைத்து மாகாணங்களினதும் பங்கேற்புடனான ஒரு செயல்முறையிலும் மத்திய அரசும் மாகாணங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பாராளுமன்றத்தினூடாக அவற்றைச் சட்டங்களாக்குவதன் மூலமுமே சீராக்கப்படலாம். இந்த விடயம் 2006இல் நிபுணர்கள் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்ததாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பிலான பொது நிரலை முற்றாக நீக்கி அந்த பட்டியலில் உள்ள விடயங்களில் மத்திய அரசுக்கு உரிய விடயங்கள் எவை மாகாண அரசுக்கு உரியவை எவை என்பதை திட்ட வட்டமாக வரையறுத்துக் கொள்ளல் வேண்டும். இவ்வாறான ஒரு சுருக்கமான கட்டுரையில் இந்த விடயங்கள் தொடர்பாக ஆழமாக அலசுவது சாத்தியமில்லை எனினும் மாகாண சபைகள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வுடன் செயற்படுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களை அடையாளப்படுத்தியுள்ளேன். திருத்தப்படவேண்டிய விடயங்களில் சில பின்வருமாறு

ஆளுநரின் வகிபாகம் இதுவரை மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கு தடையாகவே இருந்திருக்கின்றது. எனவே, ஆளுநர் மாகாண சபைகளை செயற்படுத்துவதை தெரிவு செய்யப்படட அங்கத்தவர்களிடமே விட்டு விட்டு தொடர்ந்து ஒரு தலைமைத்துவ அடையாளமாக மாத்திரம் செயற்பட வேண்டும், இதுவும் 2016 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பாராளுமன்ற உப குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஆளுநரின் அதிகாரங்களைச் சுருக்கும் வகையில் மாகாண சபை சட்டம் திருத்தப்படல் வேண்டும். மாகாண சபைகளின் வரி சேகரிக்கும் அதிகாரம் மேலும் வலுவாக்கப்படல் வேண்டும். மாகாண சபைகள் வெளி நாட்டு உதவிகளை நேரடியாக பெறுவதற்கான ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் வெளிநாட்டு உதவிகளுடன் நடைபெறும் வேலைத்திட்டங்களை நிர்வகிக்கும் அதிகாரம் இருத்தல் வேண்டும்.

இன்னுமொரு முக்கிய விடயம், மாகாண சபைகள் மக்களுக்கான சேவைகளை ஆற்றக்கூடிய வகையில் நிர்வாகம் மீள கட்டமைக்கப்படல் வேண்டும். இவ்வாறான நிர்வாக மீள் கட்டுமானம் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் கிராம சேவகர்கள் போன்ற உத்தியோகத்தர்களை மாகாண நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதுடன் அவர்கள் மத்திய அரசின் வேலைகளையும் கவனிக்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். மாகாணங்களுக்கென பகிரப்பட்ட நிரலில் உள்ளூராட்சி நிர்வாகமும் அடங்குகின்றது. ஆனால் இந்த ஏற்பாடு நகர அபிவிருத்தி திணைக்களம், மகாவலி அதிகாரசபை போன்ற மத்திய அரசின் நிறுவனங்களால் பலவீனப்படுத்தப்படுகின்றது. எனவே, இவ்வாறான மத்திய அரசின் நிறுவனங்கள் மாகாணங்களில் செயற்படும்போது மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றின் சம்மதத்துடனும் இணைந்து செயற்படக்கூடிய வகையிலும் ஏற்பாடுகள் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

சட்டம், ஒழுங்கு தொடர்பான விடயங்கள், 9ஆவது பிரிவில் உள்ள அநுபந்தம் 1 நிரல் 1இல் குறிப்பிட்டது போல, மாகாண சபைகள் கோரும் பட்சத்தில் மத்திய அரசிலிருந்து மாகாண சபைக்கு மாற்றப்படலாம். இதேபோன்ற ஓர் ஏற்பாடு ஐக்கிய இராச்சியத்தில், பொலிஸ் அதிகாரம் மத்தியில் இருந்தாலும் 2010ஆம் ஆண்டு வடக்கு அயர்லாந்து சபை அதிகாரத்தை கோரியதன் அடிப்படையில் பொலிஸ் அதிகாரம் ஹில்ஸ்பரோ ஒப்பந்தத்தின் பிரகாரம் மத்தியிலிருந்து அயர்லாந்து சபைக்கு மாற்றப்பட்டது.

இவ்வாறான முறையில் பொலிஸ் அதிகாரம் மாற்றப்படும் வரையில் தற்காலிக ஏற்பாடாக வடக்கு கிழக்கில் பணிக்கு அமர்த்தப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் குறித்த சத விகிதம் க. பொ. த சாதாரண தரம் தமிழில் சித்தியடைந்தவர்களை நியமிப்பது போன்ற ஏற்பாடுகள், இந்த மாகாணங்களில் பொலிசார் தமது கடமையை வினைத்திறனுடன் புரிவதற்கு உதவும். இதேபோன்ற ஏற்பாடுகள் மத்திய மாகாணத்திலும் செய்யப்படுவதன் மூலம் மலையக தமிழரும் பயனடைவர்.

இதேபோன்று நில அதிகாரம் தொடர்பான அநுபந்தம் 2 முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும். இது, மாகாணங்களின் நிலம் தொடர்பான பாதுகாப்புக்கு அவசியமானதாகும். ஜனாதிபதியின் கட்டளையின் பெயரில் அரச காணிகள் பாவனைக்கு சுவீகரிக்கப்படுவதும் பகிர்ந்தளிக்கப்படுவதும் மாகாண சபைகளுடன் கலந்தாலோசித்தும் அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையிலேயுமே செய்யப்படல் வேண்டும். அநுபந்தம் 2இன் பிரகாரம் மூவின அங்கத்தவர்களையும் கொண்ட தேசிய காணி ஆணைக்குழு உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.

தமிழ் கட்சிகள் இந்த சீர்திருத்தங்கள்
(20ம் பக்கம் பார்க்க)

# சாதித்தது தி.மு.க

தமிழகத்தில் நிறைவடைந்துள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. மக்களின் நம்பிக்கையை பெற்று பாரிய வெற்றியை பதிவு செய்துள்ளது. இதன் மூலம் மக்களவைத் தேர்தல் சட்டப் பேரவைத்தேர்தல் உள்ளாட்சித் தேர்தல் என்று "ஹாட்ரிக்" வெற்றியை அக் கட்சி பெற்றுள்ளது.

இருப்பினும் இந்த வெற்றிக்கான மக்களின் நம்பிக்கையை பெற தி.மு.க. வினரின் ஒருமித்த கடின உழைப்பு தான் காரணமாகவுள்ளது. குறிப்பாக எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வின் கோட்டையெனக் கருதப்படும் கொங்கு மண்டலத்தில் இந்த முறை தி.மு.க. தன்னுடைய வெற்றியை அழுத்தமாக பதிவு செய்திருப்பதற்கு ஸ்டாலினின் நம்பிக்கையைப் பெற்ற அக்கட்சியின் அமைச்சரான செந்தில் பாலாஜியின் வியூகமே காரணமாகும்.

2011ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் அப்போதைய ஆளும் கட்சியாக இருந்த மறைந்த முன்னாள் முதலவர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க கட்சி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகளையும் கைப் பற்றிச் சாதனை படைத்தது. அதே போன்றதொரு சாதனையை தற்போது தமிழகத்திலுள்ள 21 மாநகராட்சிகளையும் கைப்பற்றி தி.மு.க. படைத்திருக்கிறது. இதனால் பலரும் ஸ்டாலினை அரசியல் ரீதியாக ஜெயலலிதாவின் அனுகு முறையை பின்பற்றும் தலைவர்" என்று சுட்டிக் காட்டுகிறார்கள். தி.மு.க. தலைவரான ஸ்டாலினிடம் இருக்கும் இந்த அணுகுமுறை நீடித்தால் வரவிருக்கும் தேர்தலில் தி.மு.க. தனித்து களமிறங்கி சாதனை வெற்றியை பதிவு செய்யக் கூடும் என்றும் கணிக்கப்படுகின்றது.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தனித்து களமிறங்கிய அ.தி.மு.க. தோல்வியை சந்தித்திருக்கிறது. தனித்து களமிறங்கிய பா.ஜ.க., சில வெற்றிகளைப் பதிவு செய்திருந்தாலும், வாக்கு சதவீதம் சிறிதளவு உயர்ந்து இருந்தாலும் அக்கட்சி போட்டியிட்ட பல இடங்களில் ஒரேயொரு வாக்கைப் பெற்றிருப்பது. அக்கட்சியை மக்கள் இன்றும் ஏற்கவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்நிலையில் "தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சி என்ற இடத்தை எட்டியிருப்பதாக" தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்திருப்பது கட்சியினருக்கு உற்சாகம் அளிக்கும் ஒரு உத்தியாக மட்டுமே பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக அக்கட்சியின் மூத்த நிர்வாகிகள் சிலர் கூறுகையில்" அண்ணாமாலையின் அனுகுமுறை தற்போது தெலுங்கானா மாநில ஆளுநராக பொறுப்பேற்றிருக்கும் தமிழிசை சௌந்தரராஜனின் அணுகுமுறையை ஒத்திருப்பதாகவும் முன்னாள் காவல் துறை அதிகாரியாக பணியாற்றியவர்களை மத்திய பா.ஜ.க. அரசு, ஆளுநர்களாக நியமிப்பதை போல் தற்போதைய தமிழக பா.ஜ.க. தலைவராக இருக்கும் அண்ணாமலையும் எதிர் காலத்தில் ஏதேனுமொரு மாநிலத்திற்கு ஆளுநராக நியமிக்கப்படக்கூடும்.



அதற்கான காய்நகர்த்தல்களை தற்போதைய தலைவரான அண்ணாமலை ஈடுபட்டிருக்கின்றார்" என்று தெரிவித்துள்ளனர்.

அதே தருணத்தில் உள்ளாட்சி தேர்தலில் வாக்கு பதிவு மிகவும் குறைந்தே காணப்பட்டது. மாநில தேர்தல் ஆணையகத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி தமிழகம் முழுவதும் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 60.7 சதவீத வாக்குகளே பதிவானது. இந்த குறைவான வாக்கு பதிவிலும், ஆளும் கட்சியான தி.மு.க. வெற்றி பெற்றிருக்கின் றமை குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயம் தான். இந்தத் தேர்தலில் முதல்வர் ஸ்டாலின் மக்களை நேரடியாக சந்தித்து பிரசாரத்தை மேற்கொள்ளாமல் இணைய வழியாகவே பிரசாரத்தை மேற்கொண்டார். இதற்கான காரணத்தையும் அவர் விவரித்த போது கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

அதே தருணத்தில் சேலம் கோவை உள்ளிட்ட கொங்கு மண்டலப் பகுதிகளில் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்ட இயல்பான பேச்சுக்கு நற்பலன் கிடைத்துள்ளது. உள்ளாட்சித் தேர்தல் வெற்றி குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் பேசுகையில் "திராவிட அரசியலுக்கு மக்கள் அளித்த வெற்றி இதுவாகும். ஒன்பது மாதகால தி.மு.க. தலைமையிலான ஆட்சிக்கு மக்கள் வழங்கிய நற்சான்றிதழ்" இது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதேநேரம் முதல்வர் ஸ்டாலின் "திராவிட மொடல் அரசியல்" என்று குறிப்பிட்டதன் பின்னணி குறித்து சில விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பா.ஜ.க. தமிழகத்தில் "இந்துத்துவ வாக்கு வங்கியை" உருவாக்கத் திட்டமிட்டு அதற்கான பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் அதில் எதிர்பார்த்த முன்னேற்றம் எட்டப்பட்டிருக்கவில்லை. உள்ளாட்சி தேர்தல் பிரசாரத்தின் போது உதயநிதி ஸ்டாலினிடம் இல்லத்தரசிகளுக்கு ஆயிரம் ரூபா வழங்கும் திட்டம்" குறித்து பொது மக்கள் கேள்வி எழுப்பிய போது அதற்கு நேரடியான பதிலை உடனடியாக வழங்கி அப்பிரச்சினை தேர்தலில் எதிரொலிக்காமல் கையாண்டதும் தி.மு.க.வின் வெற்றிக்கு காரணமாகின்றது. ஆனால் சென்னை உள்ளிட்ட மாநகராட்சிகளில் தி.மு.க.வின் வெற்றிக்கு கொரோனாவைக் கட்டுப்படுத்திய பாணி மக்களை தேடி முன்னெடுக்கப்பட்ட மருத்துவ உதவி திட்டம் போன்றவை நல்லதொரு பலனை வழங்கியுள்ளது. அதே தருணத்தில் நடை பெற்று நிறைவடைந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.விற்கு மாற்று என்று மார்தட்டி உழைத்த நாம் தமிழர் கட்சி கமல்ஹாசனின் மக்கள் நீதி மையம் விஜயகாந்தின் தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் படு தோல்வியைச் சந்தித்துள்ளன. ஆனால் டி.டி.வி.தினகரன் தலைமையிலான அ.ம.மு.க., சில வெற்றிகளைப் பெற்று அக் கட்சி இன்றும் உயிர்ப்புடன் இருப்பதை நிரூபித்திருக்கிறது. இதனால் விரைவில் சசிகலா அரசியல் காய் நகர்த்தலில் ஈடுபடக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்த தேர்தலில் விஜய்யின் மக்கள் இயக்கத்தினர் சில வெற்றிகளைப் பதிவு செய்திருந்தாலும் எதிர் பார்த்த வெற்றி கிடைக்கவில்லை என்றே அந்த இயக்கத்தின் நிர்வாகிகள் தெரிவிக்கிறார்கள். அதனால் விஜய்க்கும் அரசியலில் விஜய்காந்த், கமல் ஹாசன், ரஜினிகாந்த் போன்றவர்களுக்கு ஏற்பட்ட நிலையை ஏற்படக்கூடும் என்ற ஆரூடம் தற்போது வெளிப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

உள்ளாட்சித் தேர்தலில் வெற்றியை பதிவு செய்து மக்களுக்கு நன்றியை தெரிவித்திருந்தாலும் ஆளுங்கட்சியான தி.மு.க.விற்கு தொடர்ந்து நெருக்கடிகளை கொடுக்க மத்திய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்நிலையில் தமிழக முதல்வரான ஸ்டாலின் எழுதியிருக்கும் சுயசரிதை நூல் வெளியீட்டு விழா 28ஆம் திகதியன்று சென்னையில் நடைபெற்றது.

இவ் விழாவில் பங்கு பற்றுமாறு பா.ஜ.க. அல்லாத ஏனைய தேசிய கட்சிகளுக்கு தி.மு.க. சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எதிர்கட்சிகளின் ஒருங்கிணைப்பை தி.மு.க. முன்னெடுத்து வருகிறது. இது எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது.

தி.மு.க.வின் உள்ளாட்சி வெற்றி செயற்கையான வெற்றி" என்று அ.தி.மு.க. வின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் குறிப்பிட்டிருப்பதும் "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. மக்களின் தீர்ப்பை தலை வணங்கி ஏற்கிறோம்" என்று அக்கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி தெரிவித்திருப்பதும் அக் கட்சிக்கு கிடைத்த படு தோல்வியின் வெளிப்பாடாகும்.) இருப்பினும் அ.தி.மு.க. தொடர்ந்து எதிர்க்கட்சியாக செயற்பட்டு மக்களின் பிரச்சினைகளை சட்ட மன்றத்தில் எதிரொலிக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இந்தக் கடமையை அக்கட்சி செய்யும் என்றும் எதிர்பார்க்கலாம். நகர்ப்புற உள்ளாட்சியில் 61 சத வாக்குகளைப் பெற்று சாதித்திருக்கும் தி.மு.க., மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்து செயல்பட்டால், அக்கட்சி அசைக்க முடியாத திராவிட சக்தியாக திகழும். அதுவே தி.மு.க. வின் அடுத்த சகாப்தங்களுக்கான அத்திபாரமுமாகும்.

ONLINE INSTRUCTIONS
Mr. Jonathan Ponnudurai Bsc(Hon.)

Grade: 11&12
Physics
Calculus
Advanced Functions
University Level -1
Physics
Calculus
Algebra




647-395 6987
Jonathanp1@live.ca

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தின் "ஜோதி விழா"
எதிர்வரும் யூலை 30, 31 -2022
காதுக்கு விருந்தளிக்கும்
கனடிய - தமிழகப் பாடர்களின்
இசை நிகழ்ச்சிகள்
நாவுக்கு சுவையூட்டும்
இலங்கை இந்திய உணவுச் சாவடிகள்
தொடர்புகளுக்கு 416 321 6104

# உக்ரேன் மீதான ரஷ்யப் படையெடுப்பும் உலக அரசியல் மாற்றமும்

ரஷ்ய உக்ரைன் போர் பாரிய நெருக்கடியை உலகளாவிய பரப்பில் ஏற்படுத்தியுள்ளது. தனித்து உக்ரைன் ரஷ்ய போராக அமைந்தாலும் அதன் விளைவுகள் உலகளாவிய பாதிப்பினை தருவதாக உள்ளது. நேட்டோவில் இணைவதற்கான உக்ரையினின் திட்டமிடலே இப் போருக்கான அடிப்படையாக அமைந்துள்ளது. ரஷ்யாவின் புவிசார் அரசியலை இலக்கு வைத்த நேட்டோவின் உத்தியே இப்போர் இவ்வளவு வேகமாக நகர்வதற்கு காரணமாக உள்ளது.



தற்போது உக்ரையினின் நகரங்களை நோக்கிய ரஷ்ய இராணுவத்தின் தாக்குதல் தலைநகரான கீவ்வை அடைந்துள்ளது. பல உக்ரையின் நகரங்களில் ரஷ்ய தேசியக் கொடியை ஏற்றியுள்ள ரஷ்ய இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்திவருகிறது. உக்ரையின் படைகள் சரணடைவதாகவும் இராணுவ தளபதிகள் சுட்டுக் கொல்லப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதேநேரம் ரஷ்ய விமானங்கள் உக்ரையின் ஏவுகணைகளால சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இக்ட்டுரையும் ரஷ்யாவின் உக்ரைன் மீதான போர் அடைந்து வரும் பிந்திய நிலையை தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது ரஷ்ய ஜனாதிபதி உக்ரைனுடன் பேச்சுக்களை மேற்கொள்ள தூதுக் குழுவை அனுப்ப தயாராவதாகவும் உக்ரையின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ரஷ்யாவுடன் பேசத் தயாராக இருப்பதாகவும் மேற்கு ஊடகங்கள் முதன்மைச் செய்திகளை வெளியிடுகின்றன. ஆனால் இவ்வாறு ஜனாதிபதி புடின் பேச்சுக்களுக்கு அழைப்பதன் நோக்கம் உக்ரைனுடனான போரை மட்டுப்படுத்தவும் நேட்டோவை ஈடுபடாது தடுக்கும் உத்தியாகவே தெரிகிறது.

குறிப்பாக சுவீடன் உக்ரைனுக்கு வழங்கி வரும் ஆதரவை கண்டித்த ரஷ்யாவின் அணுகுமுறை அதனையே வெளிப்படுத்துகிறது. அதே நேரம் போர் ஒரு நீண்டதாக அமைந்து விடக் கூடாது என்பதிலும் ரஷ்யா கவனம் கொள்கிறது. போரை ஒரு குறுகிய நாட்களுக்குள் நிறைவு செய்யவே ரஷ்யா திட்டமிட்டுள்ளது. நீடிக்க அனுமதிக்குமாயின் நேட்டோவின் ஆயுததளபாடங்கள் உக்ரையினுக்குள் குவியவும் போர் நீண்டு செல்லவும் வாய்ப்பு ஏற்பட கூடியதாக அமையுமென்று ரஷ்யா கருதுகிறது.

இரண்டாவது நேட்டோ நாடுகளின் அணுகுமுறையை அவதானிக்கும் போது உக்ரையினை போரில் ஈடுபடுத்தவும் அதற்கான பேச்சுக்களை முதன்மைப்படுத்துவதிலும் கவனம் கொள்கிறது போல் தெரிந்தாலும் உலக வங்கி உட்பட நேட்டோ நாடுகள் ஆயுத தளபாடங்களை உக்ரையினுக்கு வழங்குவதில் கவனம் கொள்கிறது. அமெரிக்கா உக்ரைனுக்கு அனுவாயுதங்களை வழங்கியதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது. அது மட்டுமன்றி நவீனரக ஆயுததளபாடங்களை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கி வருவது கவனத்திற்குரியதாகும். இத்தகைய ஆயுதங்களாலேயே ரஷ்யாவின் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ஆனால் இத்தகைய ஆயுதங்க் ரஷ்ய படைகளிடம் சரணடையும் உக்ரைன் இராணுவம் கையளித்து விடும் என்ற அச்சமும் நேட்டோ தரப்புக்கு உண்டு.

ஆரம்பத்தில் ரஷ்ய உக்ரைன் போரை தூண்டிய நேட்டோ தரப்பு அதிலும் குறிப்பாக அமெரிக்கா பின்னர் போர் ஆரம்பித்ததும் தனது படைகளை அனுப்பமுடியாது என அறிவித்தது. ரஷ்யா இப்போரை நிகழ்த்த வேண்டும் என்ற திட்டத்துடனேயே அமெரிக்காவின் நகர்வுகள் காணப்பட்டது. தற்போது போர் நீடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையே அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகள் முன்னெடுக்கின்றன. அதற்குப் பின்னால் ஐரோப்பாவுடனான ரஷ்ய விரிசலை ஏற்படுத்துவதுடன் அமெரிக்காவின் செல்வாக்குக்குள் ஐரோப்பா பயணிக்க வேண்டும் என்பதில் கவனம் கொள்ளும் நிலைப்பாட்டையே அமெரிக்கா எடுத்து வருகிறது. ஜேர்மனி பிரான்ஸ் மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் ரஷ்சியாவுடனான நெருக்கத்தை கடந்த காலத்தில் ஜி — 7 நாடுகளின் அமைப்பிலும் ஐரோப்பிய யூனியன் கூட்டிலும் வெளிப்படுத்தி வந்ததை அமெரிக்கா அவதானித்துள்ளது. அதற்கு பதிலளிக்கும் விதத்திலேயே அமெரிக்கா ரஷ்ய உக்ரைன் போரை கையாள முனைகிறது.

மூன்றாவது மேற்கு ஊடகங்கள் போரின் மறுபக்கத்தை முதன்மைப்படுத்த முயலுவதை விடுத்து உக்ரைனின் வெற்றிகளை மட்டுமே முதன்மைப்படுத்த அதிக பிரயத்தனம் செய்வதைக் காணமுடிகிறது. குறிப்பாக மேற்குலக ஊடகங்களே உக்ரைன் இராணுவரீதியில் வெற்றி கொள்வதாகவும் ரஷ்ய இராணுவம் கொல்லப்படுவதாகவும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால் போரில் உக்ரைனிய மக்கள் அடையும் இழப்புகளை பட்டியலிடவோ தாக்கங்களை அடையாளப்படுத்தவோ தயாராக இல்லாத நிலை காணப்படுகிறது. பாரிய இழப்புகள் அந்த மக்களுக்கு ஏற்பட்டிருப்பதுடன் பெரியளவான இடப்பெயர்வை எதிர்கொண்டிருப்பதுடன் தொடர்ச்சியாக போர் நீடித்தால் ஏற்படப் போகும் நெருக்கடியை மேற்குலக ஊடகங்கள் கவனத்தில் கொள்ளாத போக்கே அதிகமாகவுள்ளது. இது உக்ரையினிய மக்களின் கடந்த கால துயரத்தை மீள கொடுப்பதற்கான முனைப்பாகவே காணப்படுகிறது. அதாவது இரண்டாம் உலக போரில் அதிக இழப்பினையும் அழிவுகளையும் எதிர் கொண்ட மக்களாக உக்ரேயினியர்களே காணப்பட்டனர்.

நான்காவது ரஷ்யாவின் ஆறு போர் விமானங்கள் தாக்குதலில் அழிக்கப்பட்டுள்ளது. ஆனால் அத் தாக்குதலை மேற்கொண்ட தரப்போ ஆயுதமோ கண்டறியப்படவில்லை(Unknown Weapon) என்பன கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். மேற்குலகத்தின் ஆயுததளபாடங்களால் குவிந்துள்ள உக்ரையின் போரை நகர்த்துவதில் அதிக மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும் களநிலமை தெளிவாகவோ ஆதாரபூர்வமாகவோ இல்லாதுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இரு தரப்பினதும் உண்மைத்தகவல்களை உறுதிப்படுத்த முடியாதுள்ளமைக்கு காரணமாக ஊடகங்களின் ஆதிக்கமே அடிப்படையானது. மேற்குலகத்தின் ஊடக ஆதிக்கமே போரினை அளவிட முடியாதுள்ளது. அத்தகைய அணுகுமுறையே உண்மைத் தகவல்களை வெளிப்படுத்தவோ போரின் தாக்கங்களை சரிவர அளவிடமுடியாதுள்ளது.

ஐந்தாவது உக்ரையின் தலைநகரத்தை ரஷ்யப் படைகள் நெருங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. உக்ரையின் ஜனாதிபதி இராணுவ தாக்குதலில் ஈடுபட்டிருப்பதுடன் ரஷ்யப் படைகளை எதிர் கொள்ளும் போர் வீரராக மாறியுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

உலக அரசியல் தலைவர்களின் இருப்பினை ஜெலன்ஸ்கி திரும்பிப் பார்க்க வைத்துள்ளார். அவர் களத்தில் நிற்கும் அரசியல் தலைவராக மாறியுள்ளார். மக்களுடன் ஒன்றித்து இணைந்த தலைவராக உக்ரைன் ஜனாதிபதி



விளங்குகிறார். அவரது அரசியல் வருகையும் அதிகாரத்தை கைப்பற்றிய உத்தியும் சினிமாவாக அமைந்தாலும் அதற்கான ஆளுமையும் தியாக எண்ணமும் கொண்ட தலைவராக ஜெலன்ஸ்கி காணப்படுகின்றார்.

நேட்டோவின் உத்திக்குள் அகப்பட்ட ஜெலன்ஸ்கி புவிசார் அரசியலை கையாளும் தன்மையை வெளிப்படுத்தியிருந்தால் நிலமையை இலகுவாக கையாண்டிருக்க முடியும். மேற்குலகத்தின் சேவகராக மாறியதே ஜெலன்ஸ்கியின் நெருக்கடிக்கான காரணமாகும். புவிசார் அரசியலை சரிவரக் கையாளத் தவறியதன் விளைவே உக்ரைனின் நெருக்கடிக்கு வழிவகுத்த விடயமாகவுள்ளது. இலங்கை அரசியல் தலைவர்கள் அத்தகைய நெருக்கடியை வெற்றிகரமாக கையாண்டுவருவதுடன் பாரிய நெருக்கடியை தவிர்த்து வருகின்றனர்.

எனவே உக்ரைன் ரஷ்ய போர் நீடிக்கும் நிலையை கடந்துள்ளது. உக்ரையின் தலைநகரம் வீழும் நிலை முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதுடன் மேற்குலக அரசியல்“ இருப்புக்குள் அதிக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைய வாய்ப்புள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி மர்க்கோன் குறிப்பிடுவது போல் ரஷ்ய உக்ரைன் போர் ஐரோப்பாவுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது போல நிலமை உலகளவிலும் நிகழ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த போர் ரஷ்யாவை மட்டுமல்ல அதன் அணி களையும் மாற்றத்திற்கு உள்ளாக்கும். அதற்கான வாய்ப்புக்கள் சாதகமாகவோ பாதகமாகவோ அமைய வாய்ப்புள்ளது. எதுவாயினும் உலகம் ஒரு மாற்ற த்தை நோக்கி நகர்கிறது.

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் முகாமையாளர், உதவி முகாமையாளர், மற்றும் பொதுவான வேலை செய்யக்கூடிய ஆட்கள் உடனடியாகத் தேவை

தொடர்புகளுக்கு:- 416 321 6104

# இன்னொரு நெருக்கடி!

கிழக்கு உக்ரேனுக்குள் ரஷ்யா தனது படைகளை அனுப்பத் தொடங்கியுள்ள நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடைகளை விதித்திருக்கிறார்.

அவரை அடியொற்றி பிரிட்டன், கனடா, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்ரேலியா போன்றனவும் ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை அறிவித்திருக்கின்றன.

உக்ரைனைக் கைப்பற்றும் இலக்கில் புடின் உறுதியாக இருக்கிறார் என்று அமெரிக்க திரும்பத் திரும்பக் கூறி வந்த நிலையில் அதனை நிரூபிக்கும் வகையில் ரஷ்யாவின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

ரஷ்யா மீதான கடுமையான பொருளாதார தடைகளை அமெரிக்காவும் மேற்குலகமும் அறிவித்துள்ள நிலையில் ரஷ்யா தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

நாளை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் கிழக்கு ஐரோப்பாவில் போர் மேகங்கள் சூழ்ந்து விட்டன.

ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கருதப்பட்ட சூழலில் உக்ரைன் போர் இலங்கை விவகாரத்தை பின்தள்ளி விடும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பது வரையறுக்கப்பட்ட தெரிவுகளுடன் ஆடப்படுகின்ற மைதானமாக இருப்பதால் எப்போதுமே அங்கு வாய்ப்புகள் கிடைப்பது குறைவு.

இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள், நகர்வுகள் ஜெனிவாவில் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகளாகியும் அது இன்னமும் உச்சநிலையை எட்டாமல் இருப்பதற்கு அது தான் முக்கியமான காரணம்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள், தொடர்பாக நம்பகமான சாட்சியங்கள், ஆதாரங்கள் இருந்தும் அவற்றை அடிப்படையாக கொண்ட இறுக்கமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஜெனிவாவில் அவ்வப்போது பல்வேறு தடங்கல்கள் தடைகள் வந்து கொண்டிருந்தன.

லிபியா, சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் என்று அவ்வப்போது முளைவிட்ட பல்வேறு பிரச்சினைகளும் போர் மேகங்களும் ஜெனிவாவில் பல சந்தர்ப்பங்களில் இலங்கை விவகாரம் முக்கியத்துவம் இழப்பதற்கு காரணமாகிப் போயின.

சர்வதேச சமூகம் ஒரே நேரத்தில் எல்லாப் பிரச்சினைகளின் மீதும் கவனத்தை ஊன்றுவதில்லை. எல்லாப் பிரச்சினைகளின் மீதும் அவர்கள், இறுக்கமான கடுமையான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதில்லை.

அவ்வாறு எல்லா விவகாரங்களிலும் கடும் போக்கை வெளிப்படுத்தினால் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்ற நாடு அல்லது நாடுகள் தனிமைப்படுத்தப்படும் நிலை ஏற்படும். எனவே பிரச்சினைகளின் தீவிரத்தன்மைக்கு சர்வதேச சமூகம் முன்னுரிமை அளிக்கும். அடுத்தடுத்து கவனிக்க கூடிய பிரச்சினைகளை ஆறப் போடும்.

இந்த நிலை கடந்த காலங்களில் காணப்பட்டது. அந்த நிலை மீண்டும் இலங்கைக்கு ஏற்படக் கூடும்.

உக்ரைன் நெருக்கடி இலங்கைக்கு பொருளாதார ரீதியான நெருக்கடிகளையும் வேறுபல அழுத்தங்களையும் கொடுக்க கூடும் என்றாலும், ஜெனிவா விடயத்தில் இந்த நெருக்கடி இலங்கைக்கு ஆறுதலாக இருக்கக் கூடும்.

எரியும் பிரச்சினைகளுக்கு மத்தியில் இலங்கையை கண்டு கொள்வதற்கு அங்கு யாரும் இல்லாமல் போகலாம்

ஜெனிவா கூட்டத்தொடரைப் பொறுத்தவரை இம்முறை இலங்கையின் கழுத்தை யாரும் நெரிக்கப் போவதில்லை என்றாலும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்தப்படும்.

இந்தக் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக அமைச்சர் பீரிஸ் தலைமையிலான குழு ஜெனிவாவுக்கு செல்



கிறது. இதிலிருந்தே ஜெனிவா அழுத்தங்களை அரசாங்கம் இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஜெனிவா அழுத்தங்களை அலட்சியம் செய்யாமல் அங்கு வெற்றியைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. ஏனென்றால் ஜெனிவாவுடன் முட்டி முரண்டு பிடிப்பது இலங்கைக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடும்.

தற்போதைய அரசாங்கம் உள்நாட்டில் கடுமையான சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர் கொண்டுள்ளது. பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. அரசாங்க நிர்வாகம் மோசமான நிலையை அடைந்திருக்கிறது.

சட்டம் ஒழுங்கு பற்றி அரசாங்கம் பெருமையாக கூறிக் கொண்டிருந்த உருவாக்கி வைத்திருந்த மாயைகள் விலகத் தொடங்கியிருக்கின்றன.

ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் குறித்த விசாரணைகளில் திருப்பங்கள் ஏதும் நிகழவில்லை.

உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்து வெளிப்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது.

அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களும், குற்றச் சாட்டுகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

இதற்குத் தானா இந்த அரசாங்கத்தை தெரிவு செய்தோம் என்று வெளிப்படையாகப் புலம்புகின்ற நிலைக்கு மக்கள் வந்து விட்டார்கள்.

மக்களின் செல்வாக்கு சிதைந்து போயுள்ள இந்தக் கட்டத்தில் ஜெனிவாவில் அழுத்தங்களை எதிர்கொள்ளும் சூழலை உருவாக்க அரசாங்கம் விரும்பவில்லை.

அதனால் தான் ஜெனிவாவைச் சமாளிப்பதற்கான சில வேலைத் திட்டங்களை வெளிவிவகார அமைச்சின் ஊடாக அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

எவ்வாறாயினும் போர்க்குற்ற விசாரணை அல்லது போருடன் தொடர்புடைய விவகாரங்களில் ஜெனிவாவில் இருந்து முன்னெடுக்கப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் இணங்கிப் போக அரசாங்கம் தயாராக இல்லை. இதனைச் சார்ந்த அழுத்தங்களை சமாளிப்பது குறித்து அரசாங்கம் சிந்தித்து வரும் நிலையிலேயே உக்ரைன் நெருக்கடி தீவிரமடைந்து வருவது அரசாங்கத்துக்கு ஆறுதலை அளிக்க கூடும். ஏனென்றால் உக்ரைன் விவகாரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால் ஜெனிவாவில் இலங்கை விவகாரம் மீதான கவனிப்பு குறையும்.

அதேவேளை ஜெனிவாவில் இருந்து தப்பிக் கொள்வதாக அரசாங்கம் அதிகம் மகிழ்ச்சி கொள்ள முடியாது. ஏனென்றால் உக்ரைனில் போர் வெடித்தாலும் சரி, வெடிக்காது போனாலும் சரி, அங்குள்ள சூழல் இலங்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது.

உக்ரைன் விவகாரத்தை முன்வைத்து ரஷ்யா மீது அறிவிக்கப்பட்டுள்ள தடைகள், உக்ரைனின் மீதான ரஷ்யாவின் நெருக்கடிகள் எல்லாமே இலங்கைக்கு பொருளாதார பாதிப்புகளை ஏற்படுத்தும். இலங்கையின் தேயிலை ஏற்றுமதியும் ரஷ்ய, உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் வருகையும் இந்த நெருக்கடிகளால் பாதிக்கப்படும். ஏற்கனவே டொலர்கள் நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இவ்வாறான இழப்புகள் பாரதூரமானவையாக இருக்கப் போகிறது. அதற்கு அப்பால் ரஷ்யாவின் எரிவாயு விநியோகத் திட்டத்துக்கு ஜேர்மனி தடைவிதித்திருக்கிறது.

உக்ரேன் நெருக்கடியால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் நிலையும் தோன்றியுள்ளது.

இதனால் உலகளாவிய ரீதியாக எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் அதிகரிக்கும். விநியோகங்கள் தடைப்படும் அல்லது பாதிக்கப்படும் நிலையும் ஏற்படலாம். இவ்வாறான சூழல் இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படு


**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**




கிறது.


வருகிறது வருகிறது என்று கூறப்பட்ட உக்ரைன் போர் நெருக்கடி இப்போது வாசல் வரை சென்று விட்டது. போர் வெடிப்பது தான் மிச்சமாக இருக்கிறது.

போர் வெடித்தாலும் வெடிக்கா விட்டாலும் இந்த விவகாரத்தின் தாக்கங்களில் இருந்து இலங்கையினால் விடுபட முடியாது. ஜெனிவா இலங்கைக்கு சாதகமானதாக அமைந்தாலும் இந்தப் போர் நெருக்கடி பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்

ஆக ஜெனிவாவில் தன் மீதான கவனக் கூர்ப்பு குறையும் என்று இலங்கையினால் நிம்மதி கொள்ள முடியாது.

ஏனென்றால் அதனை விட மோசமான நெருக்கடி இலங்கைக்கு காத்திருக்கிறது.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# 13வது திருத்தமும் தமிழ் அரசியல் சமூகமும் ஒரு யதார்த்த

(16ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதே எனது பரிந்துரையாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மற்றைய பங்காளரென்ற வகையில் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும் என்றும், அதன் மூலமே தமிழ் பேசும் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகார பரவலாக்கம் சாத்தியமாகுமென்றும் ஒப்பந்தத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது போல வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் சரித்திர பூர்வமான தாயகம் என்றும் இந்திய அரசு சட்டபூர்வமாக வற்புறுத்தமுடியும்..

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கு அமைய இலங்கை அரசு காலதாமதமின்றி மாகாண சபை தேர்தல்களை நடாத்தி சில வருடங்களாக கிடப்பில் போடப்பட்டுள்ள மாகாண சபை நிறுவனங்களை செயற்பட வைத்தல் வேண்டும். மாகாண சபைகள் இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் பயனுள்ளதாக இருப்பதுடன், ஓர் ஒழுங்கு படுத்தப்படட மக்கள் சேவையை அனைத்து மக்களுக்கும் வழங்கும் நிறுவனமாகவும் இருக்கும்.

ஜனாதிபதி வரவுசெலவுத் திட்ட உரையின் போது மக்களின் தேவைகளிலும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தும்படி தமிழ் கட்சிகளுக்கு ஆலோசனை தெரிவித்திருந்ததை கவனித்திருந்தேன். இது, உண்மையான ஜனநாயகமும் மக்களின் பங்குபற்றுதலும் ஆலோசனைகளுமுடனான பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மூலோபாயங்களை வகுப்பதன் மூலமுமே சாத்தியமாகும். இது, மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள் போன்றவற்றினூடாக அடிமட்ட மக்களின் பங்களிப்புடன் செய்யப்படுவதே அர்த்தமுள்ளதாகும். அவர்களுக்கே அவர்களது தேவைகள் நன்கு புரியும். கொழும்பிலிருந்து திட்டமிடும் நிர்வாகிகளுக்கு அடிமட்ட மக்களின் சூழ்நிலைகளோ,தேவைகளோ புரியாது. எனது பார்வையில் தமிழ் பேசும் மக்களுக்கு பயனுள்ளதும் சேவை செய்யக் கூடியதுமான அதிகார பரவலாக்க அலகு மாகாண அலகே. இது, அவர்களது பாரம்பரிய பிரதேசத்தில் ஓரளவுக்கு சுயாதீனமாக செயற்பட உதவும். ஐக்கிய இராச்சியத்தில் ஒற்றை ஆட்சியின் கீழ் உள்ளது போன்ற தனித்துவமான இன அடையாளங்களைக்கொண்ட ஸ்கொட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து ஆகியன 13ஆவது திருத்தத்திற்கு ஒத்ததான சட்டவாக்க சபைகளையே கொண்டிருக்கிறன. ஸ்கொட்லாந்தில் 'பாராளுமன்றம்' என்றே அழைக்கிறார்கள்.

நான் இந்த கட்டுரையில் பரிந்துரைத்துள்ள ஆளுநரின் அதிகாரங்கள், மாகாண சபைகளுக்கான நிதி வளங்களை ஏற்படுத்துதல், நிர்வாக கட்டமைப்புகளை சீர்படுத்துதல் போன்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அனைத்தும் பின்வரும் அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டவையே. அவையாவனஹ 2006 ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாட்டுக்கு ஆலோசனைகளை வழங்கிய நிபுணர் குழு அறிக்கை 2010இல் தயாரிக்கப்பட்ட நகல் அரசியலமைப்பு. 2016ஆம் ஆண்டின் மத்திய மாகாண உறவுகள் பற்றிய உப குழு அறிக்கை என்பவையாகும்.

இந்த சூழ்நிலையில் தற்போது பேசப்படும் புதிய அரசியல் யாப்பானது ஏற்கனவே ஆராயப்பட்டுள்ள பரிந்துரைகளை உள்வாங்கிக் கொள்ளலாம். இது தொடர்பாக புதிதாக ஆலோசிக்கப்படவோ, கண்டு பிடிக்கப்படவோ தேவைகள் எதுவும் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் மாகாண சபை முறைமை அதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு தேவையான திருத்தங்களை செய்யுமிடத்து வினைத்திறனுள்ளதாகவும் வெற்றிகரமாக செயற்படக் கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான மாற்றங்கள் செய்யப்படுவதற்கு பாரிய அரசியல் சட்ட மாற்றங்கள் அவசியமில்லை.

இம் மாற்றங்கள் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடனேயே நிறைவேற்றப்படலாம். அத்துடன் நிர்வாக மாற்றங்களை 13ஆவது திருத்தத்தை பாவித்தே ஜனாதிபதியின் வர்த்தமானி அறிக்கைகள் மூலம் அமுல் படுத்தலாம்.

(கட்டுரையாளர் 2006 நிபுணர்கள் குழு உறுப்பினரும் இக் குழுவின் பெரும்பான்மை அறிக்கையில் ஒப்பமிட்டவருமாவார் அத்துடன் அண்மையில் கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள சந்திப்புக்களில் ஈடுபட்ட மூவர் அடங்கிய நிபுனர் குழுவிலும் ஒருவராவார்)

# விண்வெளியிலும் அமெரிக்கா - ரஷ்யா பதற்றம்?


(8ம் பக்கத் தொடர்ச்சி) செய்து வருகின்றது- என அதன் இணை நிர்வாகிகளில் ஒருவரான கதி லூடேர்ஸ் (Kathy Lueders) தெரிவித்திருக்கிறார். சர்வதேச விண்வெளி நிலையத்தின் சரியான செயற்பாட்டிற்கு ரஷ்யாவின்பங்கு அவசியமாகும். அதன் உந்து விசைஅமைப்பு (propulsion system) சுற்றுப் பாதையில் சீரமைப்புகளைச் செய்வதற்குப் பெரிதும் உதவுகின்றது.

இந்த நிலையில் ரஷ்ய விண்வெளிஆராய்ச்சி நிறுவனத்தின் (Russian space agency) பணிப்பாளர் திமித்ரி ரோகோஸின் (Dmitry Rogozin) கடந்த வாரம் தொடர்ச்சியாகப் பதிவிட்ட ருவீற்றர் செய்திகளில், அமெரிக்கா தங்கள் கூட்டுச் செயற்பாட்டைக் குலைக்க விரும்புகிறது என்று குற்றம் சுமத்தியிருந்தார்.

சர்வதேச விண்வெளி நிலையம் அதன் சுற்றுப்பாதையை விட்டு விலகி கட்டுப்பாட்டை இழந்தால் அது அமெரிக்கா மீதோ அல்லது ஐரோப்பா மீதோ வீழ்வதை ரஷ்யாவின் உதவி இல்லாமல் உங்களால் தவிர்க்க முயுமா? என்றும் அவர் பீதியூ ட்டும் கேள்வியை எழுப்பி இருந்தார்.

அவரது ருவீற்றர் பதிவுகள் ஒருவித பதற்ற நிலைமையை விண்வெளி ஆராய்ச்சியாளர்களிடையே ஏற்படுத்தியது. இதேவேளை,பிரெஞ்சு கயானாவில் (French Guiana) உள்ள குரோவ் (Kourou) விண்வெளி ஏவுதளத்தை ரஷ்யா பயன்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருக்கிறது.

SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# ஈழத்தமிழர் நோக்கிய இந்தியாவின் அணுகு முறையும் அதன் தோல்விகளும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
பேராசிரியர் K.T. கணேசலிங்கம்



இந்தோ பசுபிக் கட்டமைப்பு விருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றிய கேள்விகளும் இலங்கை இந்திய அமெரிக்க சீன உறவு பற்றிய உரையாடல்களும் பொது வெளியில் அவதானிக்கப்படுகிறது. அது மட்டுமன்றி ஈழத்தமிழர்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் போக்கினையும் இந்தியாவை அணுகும் எந்த நகர்வையும் நிராகரிக்கும் அத் தரப்புக்கள் ஈழத்தமிழரது பற்றி வருகின்றனர். இதனை அண்மையில் வெளிவிவகார அமைச்சர் இந்திய இராஜதந்திரிகளுடன் மெய்நிகர் சந்திப்பில் உரையாடிய போதே தெரிந்திருந்தது.

இந்தியாவை திருப்திப்படுத்துவதில் இலங்கை ஆட்சியாளர்களின் அணுகுமுறை முதன்மையானதாகவே அமைந்துள்ளது. அண்மைக் காலத்தில் மனித உரிமைகள் பாதுகாக்கவும்



மாறாக அத்தகைய அணுகுமுறையை முற்றாக பலவீனப்படுத்த முடியாவிட்டாலும் நலன்கள் அடிப்படையில் இலங்கைத்தீவை இந்தியா பலப்படுத்திக் கொள்ளலாம் எனக் கருதுகிறது. ஆனால் அதனையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தோற்கடித்து நெருக்கடியை கையாண்டு சீனாவுடனான உறவை பலப்படுத்தி விடுவதற்கான வாய்ப்பு அதிகமுண்டு. சுதந்திர இலங்கையில் இந்தியா அத்தகைய தோல்வியையே இலங்கைத்தீவிடம் அடைந்து வருகின்றது.

எல்லா சந்தர்பத்திலும் இலங்கை ஆட்சியாளர்கள் தமது உத்திகளை முதன்மைப்படுத்திக் கொள்வதையும் அதனூடாக நெருக்கடியை கையாளுவதிலும் கைதேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். இதில் ஓரளவு வெற்றியை இந்தியத் தரப்பு எட்டினாலும் ஈழத் தமிழர்கள் முழுமையான தோல்வியையே அடைந்து வருகின்றனர்.

அரசுகள் என்ற அடிப்படையில் இரு நாட்டுக்குமான உறவு ஏற்றமும் இறக்கமுமாக அமைந்தாலும் ஈழத் தமிழர்கள் முழுமையான தோல்விகளையே சந்தித்த வருகின்றனர். ஈழத் தமிழர்கள் இந்தியாவை எதிர்த்த போதும் தோற்றார்கள் இந்தியாவை விட்டு மேற்கை அணுகியபோதும் களையும் உறவுகளில் ஒட்டமுடியாத நிலையையும் ஏற்படுத்தி விடுவதை காணமுடிகிறது. அதுவே ஈழத் தமிழரது தோல்விகளுக்கான காரணமாக மாறியுள்ளது.

நான்காவது ஈழத்தமிழரின் தலைமைகள் இரு வகையானவர்கள். ஒன்று நூறு வீதம் எதிரியாவது. இதில் மித வாதத்தையும் தீவிரவாதத்தையும் ஒரே தளத்தில் வைத்து பார்க்க வேண்டிய நிலையே காணப்படுகிறது.

இந்தியாவின் படையெடுப்புக்குப் பின்னர் இந்தியா பற்றி ஈழத்தமிழர் கொண்டிருந்த நிலையும் ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பின்னர் இந்திய இராஜதந்திரிகளும் நிர்வாகிகளும் கொண்டிருக்கும் மனோநிலையும் வேறு வேறானது. ஒன்றுக்கு ஒன்று எதிரானது.

ஆனால் இருதரப்புமே சம தூரத்தில் தமது உறவை வைத்துக் கொள்ளும் புவிசார் அரசியலில் தான் உள்ளனர். அதனை அணுகுவதற்கான சூழலையே உருவாக்க இருதரப்பும் முன்வராத

அரசியலின் உண்மை நிலையை மேலும் பலவீனப்படுத்துவதில் கவனம் கொள்வதாகவே தெரிகிறது. ஏறக்குறைய ஒரு கற்பனாவாதத்திற்குள்ளால் ஈழத்தமிழர்களை இயக்க வேண்டும் என தற்போதும் முயல்கிறார்கள். இந்தியாவை அணுகுவதும் கையாளுவதும் இந்தியாவிடம் அடிமை கொள்வது போன்றதல்ல. இலங்கைத் தீவின் புவிசார் அரசியலுக்குள் ஈழத்து தமிழர்களும் ஈழத்து சிங்களவரும் இந்தியாவை எப்படி அணுகுகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

முதலாவது இலங்கையின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீளவும் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். இந்தியாவிடமிருந்து கடன் பெறுவதற்கான உத்தரவாதங்களை உறுதிப்படுத்துவதுடன் அது தொடர்பிலான உரையாடல்களை மேற்கொள்ளும் நோக்குடன் நிதியமைச்சின் செயலாளரும் இந்தியா செல்லவுள்ளதாக தெரிய வருகிறது.

இது இந்தியாவுக்கு நிதியமைச்சரின் இந்த ஆண்டுக்கான இரண்டாவது விஜயமாகும். அண்மையில் வெளிவிவகார அமைச்சர் விஜயம் செய்ததுடன் அதிக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் அவரது இந்தியப் பயணம் நிறைவடைந்திருந்தது.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட பதவி ஏற்ற பின்னர் இலங்கை இந்திய உறவு புதிய பொலிவுடன் இயங்க ஆரம்பித்துள்ளது. அதற்கான அணுகுமுறைகளை மேற்கொண்டு வரும் தென்னிலங்கைத் தரப்பானது ஜெனீவா அரங்கினை இந்தியாவுக்கூடாக கையாள அதிகம் முனைவதனைக் காணமுடிகிறது.

அது மட்டுமன்றி ஈழத்தமிழர் மீதான அரசியலையும் அதிகாரப் பகிர்வையும் தனது எல்லைக்குள் வைத்து நகர்த்தும் உத்தரவாதத்தை பெறுவதில் கவனம் கொள்ளும் முனைப்பையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பின்

அதனை பேணவும் எத்தகைய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டதாக தெரியப்படுத்தியிருந்தமை கவனிக்கத்தக்கதாகும். அதாவது இந்தியாவுக்கூடாக உலகத்தைக் கையாள தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மீண்டும் ஒரு நகர்வை மேற்கொண்டுள்ளனர்.

இரண்டாவது இலங்கைத்தீவில் நிலவும் நிதழ நெருக்கடியை குறைப்பதற்கு உதவும் நோக்கில் இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அமைய மெய்நிகர் மகாநாட்டில் உரையாடும் போது தெரிவித்தார். அது மட்டுமன்றி கடந்த காலத்தில் இலங்கைக்கு வழங்கிய நிதி மற்றும் பொருளாதார உதவிகளையும் பட்டியலிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைத் தீவை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள பொருளாதார உத்தியை முதன்மைக் காரணியாக கொள்ள திட்டமிட்டுள்ளது. சீனாவிடமிருந்து இலங்கைத் தீவை பாதுகாப்பதே இந்தியாவின் பிரதான நோக்கமாகும்.

அதாவது தனது அதிகாரத்திற்குள் இலங்கைத்தீவு காணப்படவே வண்டும், அதற்காக எதனையும் மேற் கொள்ள இந்தியா முனையும். ஆனால் இந்தியாவின் நலனே முதன்மையே அடிப்படையானது. இந்தியாவை விட சீனாவுடன் நெருகமைந்துள்ள இலங்கைத்தீவு தற்போதைய நெருக்கடியை கையாள இந்தியாவைப் பயன்படுத்திக் கொள்கிறது. அதனையே தற்போது இலங்கைத் தரப்பு மேற்கொள்கின்றது என்பது இந்தியத்தரப்பு உணராது செயல்படுவதாக கூற முடியாது.

தோற்றார்கள் என்பது தவிர்க்க முடியாத பதிவாக உள்ளது. அவ்வப்போது எழுச்சிகரமானதாக அமைந்தாலும் இறுதியிலும் இறுதியாக தோற்றுள்ளனர்.

மூன்றாவது ஈழத்தமிழர்கள் தமது அரசியலை இந்தியாவுடனேயே ஆரம்பித்தார்கள். அதற்குக் காரணம் ஈழத்து சிங்களவருக்கு இருந்தது போல் ஈழத் தமிழருக்கு உரியதாகக் காணப்பட்ட புவிசார் அரசியல் இருப்பு மட்டுமேயாகும். அதனை எதிர் கொள்வதில் ஈழத்து தமிழரை விட சிங்களவர் முந்திக் கொண்டார்கள் என்பதை காலம் காலமாக அவதானிக்க முடிகிறது. ஆனால் அவர்களிடம் இந்திய எதிர்ப்பு வாதமே அடிப்படையானது. ஆனால் அத்தகைய எதிர்ப்புவாதத்தை இந்தியாவுக்கு வெளிப்படுத்தாது இராஜதந்திரத்திற் கூடாக நகர்த்துகின்றனர். அதில் அவர்களது உத்தி மேலானதாகவே தெரிகிறது.

அத்தகைய உத்திக்குள் இந்திய இராஜதந்திரந்திற்கூடாக நகர்த்துகின்றனர். அதில் அவர்களது உத்தி மேலானதாகவே தெரிகிறது. அத்தகைய உத்திக்குள் இந்திய இராஜதந்திரிகளும் நிர்வாகிகளும் தோற்றுப் போகும் நிலையைக் காணமுடிகிறது.

அந்த விதத்தில் இலங்கை இராஜதந்திரம் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் ஈழத்தமிழரோ அவ்வகையான அணுகுமுறைக்குள் உணர்ச்சிகளுக்கு முதன்மை கொடுப்பதுடன் தீவிர எதிர்ப்புவாதத்தை முன்னகர்த்தி அழிவு போக்கை கவனத்தில் கொள்ள வேண்டும். உலக அரசியல் மாற்றங்களும் புவிசார் அரசியல் மாற்றங்களும் இவ்விரு தரப்பையும் ஒன்றுசேர விடாது தென்னிலங்கைத் தரப்பு சரியான உத்திகளுடன் கையாளுகையை திட்டமிட்டு நகர்த்துகிறது. எனவே ஈழத்தமிழரது இந்தியா பொறுத்த அணுகுமுறை மட்டுமல்ல இந்தியா பொறுத்த அணுகுமுறையும் மாற்றமடைய வேண்டும். அதற்கான வாய்ப்புகளை தென்னிலங்கை இராஜதந்திரிகளும் அவர்களின் வழிகாட்டல்களுக்குட்பட்ட தலைவர்களும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதே மறுக்க முடியாத பதிவாகவே உள்ளது.

ஆனால் இந்தியர்களும் சீனர்களும் அமெரிக்கர்களும் இலங்கைத் தீவை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும் அதனைக் கையாளவும் கூட்டாக செயல்படுவார்கள்.

அதில் இந்தோ பசுபிக் உபாயத்தையும் சுற்று மற்றும் பாதை முன் முயற்சியையும் ஒரே உறைக்குள் இலங்கை ஆட்சியாளர் வைத்துக் கொள்ளும் திராணியுடையவர்களாக காணப்படுகின்றனர். அதனை அத்தகைய தரப்புகளும் விரும்புகின்றனர். ரஷ்யாவின் உக்ரைன் மீதான தாக்குதல் எழுச்சியானது சீனாவின் கூட்டை பலப்படுத்தியுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மறுவளமாக அமெரிக்கத் தரப்பினை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

(5ம் பக்கத் தொடர்ச்சி) புரிந்து கொள்ள வேண்டும். இதனைப் புரிந்து கொண்டால், தமிழ் சூழலில் துரோகிகள், காட்டிக் கொடுப்பாளர்கள், எட்டப்பர்கள், முகவர்கள் என்னும் சொற்களுடன் மல்லுக்கட்ட வேண்டிய தேவையேற்படாது. அரசியலை அறிவுபூ ர்வமாக அணுகும்எவரும் இவ்வாறான சொற்களுடன் மல்லுக் கட்ட மாட்டார்கள்.


விடுதலைப்புலிகள் தோல்வியடைந்த போது, பல நாடுகள் குறிப்பாக, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் ராஜபக்ஷவின் போருக்கு உதவியதாக தமிழ் சூழலில் ஆங்காங்கே ஆவேசமாகப் பேசப்பட்டது. ஆனால் இன்று அந்த இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் அழுத்தங்களை கோரித் தான் தமிழர் அரசியல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

மஹிந்தவின் போருக்கு இந்த நாடுகள் அனைத்தும் ஆசீர்வாதம் வழங்கியது உண்மை தான். ஆனாலும் இன்றைய உலகில் அவர்களுடன்தானே மீளவும் தமிழர்கள் உரையாட வேண்டியிருக்கின்றது.


இதே போன்று தான் ஏனைய விடயங்கள் அனைத்தும். ஏனெனில், அரசியல் முடிவுகள் நிர்ப்பந்தங்களால் நிகழ்பவை, விருபங்களால் அல்ல.

MASTER MATRIMONY
திருமண பொருத்தம்
உங்கள் பிள்ளைகளின் சகல விதமான
அடிப்படைகளையும் கருத்தில் கொண்டு,
உங்களினதும் உங்கள் பிள்ளைகளினதும்
விருப்பங்களிற்கிணங்க சேவை
நடைமுறைப் படுத்தப்படும்.
குறிப்பு: ஜாதகப் பொருத்தம் தேவைப்படின்,
இலவச கணிப்பீடு செய்து தரப்படும்.
Cell: 647 967 3636, Cell: 514 295 6695
Email: rajthevmaster123@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! உங்களை சார்ந்தவர்களே உங்களை தவறாக நினைக்கலாம் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது. பிள்ளைகளை அனுசரித்து செல்வது நன்மையை தரும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். பல தடைகளை தாண்டி செயல்பட வேண்டி இருக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணிபுரிவர். சிலர் புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். பெண்கள் வீண் பேச்சுக்களை குறைத்து செயலில் கவனம் செலுத்துவது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்சனைகள் குறையும். குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். அடுத்தவருக்காக செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். வாகனம் பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். சக ஊழியர்கள் நட்புடன் பழகுவர். பெண்கள் எந்த ஒரு முடிவையும் எடுக்கும்போது ஒரு முறைக்கு பல முறை யோசிப்பது நல்லது.




மிதுனராசி அன்பர்களே! எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். குடும்பத்தினரின் செயல்கள் மனவருத்தத்தை தரும். கவனமாக கையாள்வது நல்லது. பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நன்மையை தரும். கணவன், மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் அடையும்படியான சூழ்நிலை ஏற்படும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும். எதிலும் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது. கொடுத்த வேலைகளை நேரத்தில் செய்வது உகந்தது. பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும்.




கடகராசி அன்பர்களே! புத்திசாதுரியத்தால் எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். குடும்பத்தை விட்டு வெளியே சென்று தங்க நேரிடலாம். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும். விருந்தினர்கள் வருகை இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். உத்யோகத்தில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க வேண்டி இருக்கும். பணி நிமித்தமாக பயணங்கள் ஏற்படலாம்.




சிம்மராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். எல்லா வகையிலும் நன்மை ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் காணப்படுவர். பிள்ளைகள் நீங்கள் கூறியதை கேட்டு அதன்படி நடப்பது ஆறுதலை தரும். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன்பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள், பொறுப்புகள் வரும். மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். விருந்தினர் வருகை உண்டு. பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். தடைகள் விலகும்.





கன்னி ராசி அன்பர்களே1 இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமானபோக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சுபகாரியங்கள், கொண்டாட்டங்கள் இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியோர் மூலம் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. எடுத்துக் கொண்ட வேலையை சரியான நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளை பேசுவதை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும்.







துலாம் ராசி அன்பர்களே! நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். சகோதரர்கள் வழியில் கவனம் தேவை. பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். விருப்பமான நபரை சந்திப்பீர்கள். கணவன், மனைவியிடையே அன்பு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை அனுப்பும் போதும், பாதுகாத்து வைக்கும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டு பெறுவர். பெண்களுக்கு மனோதைரியம் அதிகரிக்கும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தாமதமான காரியங்கள் வேகம் பிடிக்கும். வீண்கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். குடும்பத்தில் திடீர் பிரச்னை தலை தூக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். பிள்ளைகள் உங்கள் ஆலோசனையை கேட்காமல் தன்னிச்சையாக முடிவு எடுப்பர். உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். பெண்கள் வீண்பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவது நன்மை தரும்.




தனுசுராசி அன்பர்களே! எதிர்பார்த்த பணவரத்து இருக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். உழைப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்னை குறையும். கணவன், மனைவி இருவரும் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து திருப்தியடைவீர்கள். அடுத்தவர்களுக்காக எந்த பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. நண்பர்கள் உறவினர்களிடம் இருந்த பிரச்னைகள் அகலும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்யோகஸ்தர்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். பெண்கள் வழக்கத்தை விட கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.




மகரராசி அன்பர்களே! குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். சிலருக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். கணவன் மனைவி ஒருவரது பேச்சை மற்றவர் கேட்பதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நட்பு ரீதியில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் உங்களுக்கு சாதகமானதாக இருக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார சம்பந்தமாக புதிய இடம் வாங்கும் எண்ணம் ஈடேறும். உத்யோகத்தில் மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை செய்து முடிப்பர்.




கும்பராசி அன்பர்களே! அஷ்டமத்து சனியால் காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனம் தேவை.கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். குடும்பத்தில் ஏதாவது வேண்டாத பிரச்னை தலை தூக்கும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். சொத்து சார்ந்த விஷயங்கள் அனுகூலம் தரும். தொழில் வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. பெண்கள் புதிய சேமிப்பு திட்டங்களில் சேரும் போது ஒருமுறைக்கு இருமுறை ஆலோசித்து சேர்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! நீண்டநாள் இழுபறியாக இருந்த பிரச்னை முடிவுக்கு வரும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளிடம் கனிவாக நடந்து கொள்வது நல்லது. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் வருகை இருக்கும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் சாதகமான பலன் தரும். தொழில், வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர் கிடைப்பர். உத்யோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும். வர வேண்டிய பணம் வந்து சேரும். பெண்களுக்கு தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தடைபட்ட காரியங்கள் சாதகமாக முடியும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022

## உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GTM GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

**Buying / Selling / Leasing**

$ 948,000



Mclevin/Tapscott
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 3
Renovated

$ 999,990



Morningside/Mcnicoll Ave
Semi-Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 4
No Sidewalk.

$ 949,900


Brimley / Lawrence
Detached Bungalow
Bedrooms: 3
Washrooms: 1
Sep. Entrance/2 Car Garage

$ 888,888


Brimley / Ellesmere
Detached Sidesplit 3
Bedrooms: 3
Washrooms: 2
Sep Entrance/Well Kept

$ 1,299,900


Conlins Rd & Ellesmere Rd
Detached 2-Storey
Bedrooms: 4 + 2
Washrooms: 4
Well Maintained

$ 1,500,000


Lawrence & Rouge Hills
Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
Renovated W/300K

$ 1,488,000



Warden / Huntingwood
Detached Sidesplit 4
Bedrooms: 4 + 1
Washrooms: 3
Lots Of Upgrades!

$ 999,000


Steels Ave./Mccowan Rd.
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms:4
Updated

$ 998,000


Markham Rd/Steeles Av.
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms: 4
Sep Entrance/Well Maintained

$ 1,588,000


Markham Rd/14th Ave
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
High Ceilings




கமல் நவரட்ணம்
KAMAL NAVARATNAM
Sales Representative

Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office:
416-287-2222
Fax:
416-282-4488
1265 Morningside Ave.,
Suite 203, Toronto,
ON M1B 3V9

*Trusted and reliable services*


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7